விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 31 வெள்ளிக்கிழமை (14.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 146

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் ஜூலையில் சமர்ப்பிக்க ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் ஜூலை மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின் முடிபுகளை அறிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 2010 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை அரசாங்கம் சமர்பிக்கவில்லை. அதனால் மூன்று மாத அரசாங்கச் செலவீனங்களுக்கான தொகையை ஜனாதிபதி தனக்கு வழங் (18 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரில் 18 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியும் இடதுசாரி முன்னணியும் இணைந்து எதிர்வரும் மே 18 ஆம் திகதி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை வவுனியா நகரில் ஏற்பாடு செய்துள்ளதாகத் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணி கடந்த வருடம் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் கொல்லப்பட்ட மக்களை நினைவு கூரும் முகமாகவும் 12 ஆயிரம் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்கும்படி வலியுறுத்தியும் இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற படுகொலைகளை விசாரிக்க ஆணைக்குழு நியமிக்கக் (18 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசை ஒருபோதும் இந்தியா வழி நடத்த முடியாது

## அமைச்சர் விமல் காட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தை இந்தியா ஒருபோதும் வழி நடத்த முடியாது என நிர்மாணம் பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொதுச் சேவைகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## நாய்க்குச் சாப்பாடு வைக்கச் சென்ற யுவதி மீது மோசமான தாக்குதல்!

### மானிப்பாயில் மர்மச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஆட்களற்ற, அருகிலிருந்த தமது வீட்டில் வளர்த்து வரும் நாய்க்குச் சாப்பாடு வைக்கச் சென்ற யுவதி மர்மமான முறையில் தாக்கப்பட்டு கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் உடுவில் மேற்கு மானிப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த ஜே.கலைவாணி (வயது-19) என்ற யுவதியே மீட்கப்பட்டவர் ஆவார்.

இந்த மர்மச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப யுவதியின் குடும்பத்தினருக்கு அருகருகே இரண்டு வீடுகள் உள்ளன. அதில் ஒரு வீட்டில் (18 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரி சடலமாக மீட்பு

(வட்டுக்கோட்டை)

அராலிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 2 ஆம் லெப்ரினன்ட் தர படை உயரதிகாரி ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார். இவர் 23 வயதான 2 ஆம் லெப்ரினன்ட் கப்புது என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தலைப் பகுதியில் 2 துப்பாக்கிச் சூடுகள் காணப்படுகின்றன. படை முகாமிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்திற்கு அப்பால் புதிய தம்பிரான் ஆலய குளத்திற்கு அருகாக இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரேத பரிசோதனைகளுக்காகச் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-5,27)

## இலங்கை அரசாங்கம் அமைத்துள்ள விசாரணைக்குழு அதிகாரம் அற்றது

### ரொய்ட்டர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவென அமைக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு அதிகாரங்கள் அற்றது என ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவென அரசு அமைத்துள்ள விசாரணைக்குழு அதிகாரங்கள் அற்றது.

போரின் இறுதி நாள்களில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரங்கள் கூட அவர்களுக்கு இல்லை.

அமெரிக்கா தனது அறிக்கையில் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்களை கண்டறிவதற்குக் கூட அதிகாரிகளை நியமிக்க முடியாது உள்ளதாக உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்களில் இலங்கை அரசு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. ஆனால் அது தொடர்பில் யாரும் இதுவரை தண்டிக்கப்பட (18 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழு பேரை உள்ளடக்கியதாக தேசிய நல்லிணக்க ஆணைக்குழு

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

படித்த படிப்பினைகளைக் கொண்டு பிரச்சினைகளின் அடிப்படையைக் கண்டறிவதற்காக ஏழுபேர் கொண்ட தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்பக்வெல தெரிவித்தார்.

தீர்வினை எட்டாவிட்டால் அது நாட்டில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு எதிர்காலத்தில் பிரச்சினையாக அமைந்து விடும் என்பதுடன் சமாதானமும் அபிவிருத்தியும் ஒரே பாதையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன என்றும் அவர் சொன்னார்.

அரசாங்கத் (18 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாநகர சபை மேயரிடம் வாக்குமூலம் பெற நீதிமன்றம் உத்தரவு

நீதித்துறைக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரங்கள் தொடர்பாக யாழ்.மாநகர சபை மேயர் யோகேஸ்வரி பற்குணராசாவிடம் வாக்குமூலம் பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ்.மாவட்ட நீதிவான் ஆனந்தராஜா யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

யாழ்.மாநகர சபையின் பிரதி மேயர் றீகன் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பத்திரிகைகளில் யாழ்.மாநகர சபையினால் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.

அது குறித்து அதிருப்தி வெளியிட்ட நீதிமன்றம், மாற்று விளம்பரம் ஒன்றைப் பிரசுரிக்க வேண்டும் என உத்தரவிட்டது. அதிலும் திருப்தியடையாத நிலையில் மேயரின் வாக்குமூலத்தைப் பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதி நீதிமன்றில் சமர்பிக்குமாறு யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## பாவிலுப்பிள்ளை இக்னேசியஸ் கிறிஸ்ரி



மாதகலைப் பிறப்பிடமாகவும் சிலாவத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலுப்பிள்ளை இக்னேசியஸ் கிறிஸ்ரி 11.05.2010 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை பாவிலுப்பிள்ளை-அன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலம் சென்றவர்களான தொபியாஸ் அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற லூயிஸ் பேடினன்ட் மற்றும் எட்வின் ஜெயசிங்கம், அல்பிரட், கென்றி துரைசிங்கம், டொலறோ சாடல்சி, யோசப் ஆகியோரின் சகோதரரும் மேரி பிரான்சிஸ்காவின் அன்புக் கணவரும்,

அல்பிரட், பேபி, ராணி, கௌரி, அமலநாதன், ரஜனி ஆகியோரின் மைத்துனரும் டிக்சன் லெனற், இமாக்குலேற்றா, அருட்சகோதரர் பேடினன்ட், ஜெநெற் CR, வின்ஸ்ரன் வெனற் ஆகியோரின் அன்புத்தந்தையும், திவ்வியா, கலிஸ்ரஸ் குரூஸ் ஆகியோரின் மாமனாரும்,

ராஜினி, டன்சன், நிலானி, சுபோதினி, அன்ரனி, யோனார்த்தன், கறல்ட், கென்றியற்றா, கறிஸ், கென்றீனா ஆகியோரின் பெரிய தந்தையும், ஜெறோம், ஜெரியா, சிறோமி ஆகியோரின் பெரிய மாமாவும், டெறிஷா, றிபோன்ஷிக்கா, திரிஷாத், நிலோஷிக்கா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை 15.05.2010 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்று பின்னர் புதின தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
மாதகல்.

தகவல்:
குடும்பத்தினர்
023 3230383

(1399)

## கணபதிப்பிள்ளை பூபாலபிள்ளை (மாஸ்ரர்)

(ஓய்வு பெற்ற அதிபர்)



மன்னம்பிட்டியை பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பூபாலபிள்ளை (மாஸ்ரர்) 11.05.2010 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலம் சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான தம்பிமுத்து-தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், கமலாவின் அன்புக் கணவரும், அமரர் ஸ்ரீதர், ஸ்ரீநிவாசன், ஸ்ரீஸ்காந்தன், ஜெயஸ்ரீ, ஸ்ரீரங்கதாசன், அமரர் ஸ்ரீகானமுரளிதரன், ஸ்ரீகானமுகுந்தன் ஆகியோரின் அருமைத் தந்தையும், தர்ஷினி, ஷோபனா, தற்குணராசா, சுமதி, ஜெயஸ்ரீ ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டினோசா, மதுஷா, விஷ்ணு, ஆகாஷ், ஜனுஷா, மதுஷன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), சிந்துஜன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), மயூரிகா, திரிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், தங்கம்மா, குஞ்சுப்பிள்ளை, நாகலிங்கம், அழகுதங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேலுப்பிள்ளை, பேரின்பராசா, ரட்ணசிங்கம், ரஞ்சிதம், அருமைத்துரை, பரிமளா, மாலினி,சரோஜா மற்றும் அமரர் தருமராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

நேற்று இடம்பெறவிருந்த (வியாழன் மாலை) அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புகழுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துர்க்கையம்மன் கோயில் வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
077 3719650

(1385)

# கிளினிக் சென்ற பெண்ணின் தங்க நகைகள் அபகரிப்பு

## மஞ்சள் உடை தரிந்திருந்தவர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் நீரிழிவு நோய்க்கான கிளினிக்குக்குச் சென்ற குடும்பப் பெண் ஒருவரின் 6 பவுண் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலை பணியாளர் போல் மஞ்சள் உடையணிந்திருந்த ஒருவரினால் நேற்றுக்காலை நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளரிடம் முறையிடப்பட்டுள்ளது.

யாழ். இந்து மகளிர் கல்லூரி வீதியைச் சேர்ந்த தில்லை ராஜேஸ்வரி (வயது 55) என்ற குடும்பப் குடும்பப் பெண்ணின் 6 பவுண் தங்க நகைகளே அபகரிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

யாழ். போதனா வைத்திய சாலையில் நீரிழிவு கிளினிக்குக்காக சென்ற பிரஸ்தாபப் பெண் வைத்தியப் பரிசோதனையை முடித்துக் கொண்டு ஆய்வுகூடப் பரிசோதனைக்காகச் சென்றுள்ளார்.

அங்கு சென்ற அவரிடம் வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்கள் போன்று மஞ்சள் நிற உடை அணிந்திருந்த ஒருவர், பரிசோதனையின் போது நகைகள் அணிந்திருக்க முடியாது எனவும் நகைகளை கழற்றித்தருமாறும் கூறியுள்ளார்.

பணியாளரைப் போன்று நின்ற நபரின் மீது நம்பிக்கைக் கொண்ட அப் பெண் நகைகளை ஒப்படைத்துவிட்டு பரிசோதனைக்காக சென்றுள்ளார்.

பரிசோதனையைமுடித்துக்கொண்டுவெளியே வந்தபோது நகைகளைப்பெற்றுக் கொண்ட நபரைக்காணாது அவர் திகைத்து நின்றார்.

அப்பகுதியில் தேடியபோதும் அந் நபரை காணவில்லை. இது குறித்து பாதிக்கப்பட்ட பெண்ணினால் வைத்தியசாலை பணிப்பாளரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ச-7)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு சிறி சிவகாமி அம்பாள் திருக்கோயில் 35 ஆவது ஆண்டு மகோற்சவ பெருவிழா நாளை மறுதினம் காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் மகோற்சவத்தில் 25ஆம் திகதி சப்பரமும் 26ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ச-3)

# கலாபூசணம் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்படும் கலாபூசண விருது 2010ற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எனவே யாழ்ப்பாண பிரதேச செயலகஎல்லைக்குட்பட்ட சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை ஆகியதுறைகள் சார்ந்ததகுதிவாய்ந்தகலைஞர்களைஇவ்விருதுக்காகவிண்ணப்பிக்குமாறு யாழ்ப்பாண பிரதேசசெயலாளர்திருமதி எ.சாந்தசீலன் கேட்டுள்ளார்.

இதற்கான விண்ணப்ப முடிபுத்திகதி இம் மாதம் 25ஆகும். (ச)

# கட்டாயக் கல்வி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கட்டாயக் கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் திரைப்படக் காட்சியும் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/புன்னாலைக் கட்டுவன் மகா வித்தியாலயத்தில் நடைபெற வுள்ளது.

வலிகாமம் கல்வி வலய கட்டாயக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள பெற்றோர்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறு அதிபர் இரா.ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

# கழுத்தை வெட்டிய சிறைக் கைதி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சாப்பாட்டுக் கோப்பையால் கழுத்தைவெட்டி தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் எம்.லங்கேஸ்வரன் (வயது 37) என்ற கைதியே காயமடைந்தவராவார்.

காயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-7)


## வர்த்தகர்களுக்கு வாரணத்தின் ஓர் இனிப்பான செய்தி

உங்கள் நிறுவனம் மற்றும் உற்பத்தி விளம்பரங்களை உள்ளூரில் மட்டுமல்ல உலகெங்கும் விளம்பரம் செய்ய எமது சர்வதேச இணைய வானொலி வாரணம் எவ்.எம்.தயாராக இருக்கிறது.
குரல் மூலமாகவும் இணைய பக்கத்திலும் பிரசுரிப்பதன் மூலம் உங்கள் வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

✦ ஆலய உற்சவங்களையும் நேரடி ஒலிபரப்புச்செய்யலாம்.

தொடர்புகட்கு: வாரணம் FM

58, ஜோசப்டயஸ்
மாவத்தை,
கொழும்பு-15
011 2521281

20, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
0772205727
varanamfm@yahoo.com

www.varanamfm.com (1397)

## பெருமகிழ்வு கொள்கின்றோம்



ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை எமது மக்களின் சகல தேவைகளையும் நிறைவேற்றி வரும்

எமது அன்புக்குரிய
பெரிய தோழர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்கள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்றதை மிகவும் மன நிறைவுடன் பெருமகிழ்வு கொள்வதுடன் அவரின் சேவை தொடர்ந்தும் மேலோங்க இறையாசி கிடைக்க வேண்டுகின்றோம்.

மகிழ்வுடன்
அனலைதீவு,
மத்திய சனசமூக நிலையம், லக்கிஸ்டார் விளையாட்டுக் கழகம்
அனலை வாழ் மக்களும்.

(1393)

# இன்று ஒரு தகவல்

## கடவுள் பயம்

''தெய்வத்துக்குப் பயந்து நடந்து கொள் என்று சொல்கிறார்களே... அந்த தெய்வ பயம் தேவைதானா?'' என்று ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டார் ஒருத்தர்.

"கடவுளை பயத்தின் மூலமாக அடைய முடியாது" என்று பதில் சொன்னார். அந்தப் பெரியவர்.

அதற்கு உதாரணமாக ஒரு கதையையும் சொன்னார்.

ஒரு பிச்சைக்காரன் ஓர் அனாதைச் சிறுவனை வளர்த்து வந்தானாம். அவர்கள் இருந்த குடிசைக்குப் பக்கத்தில் ஒரு சுடுகாடு இருந்ததாம். இந்தச் சின்னப்பையன் இரவு நேரத்தில் அந்தச் சுடுகாட்டுப் பக்கமாகப் போய் ஏதாவது குறும்பு செய்யாமல் இருக்க வேண்டுமே . என்று நினைத்தான் அந்தப் பிச்சைக்காரன். அதற்காக அந்தப் பையனிடம் சொன்னான்.

"இதோ பாரப்பா... இரவு வேளையில் அந்தச் சுடுகாட்டுப் பக்கம் போனால் அங்கேயிருக்கிற பேய்கள் உன்னைப் பிடித்து தின்றுவிடும்'' என்று சொல்லிப் பயமுறுத்தி வைத்தான்.

அந்தப் பையன் படித்து வாலிபனாக வளர்ந்து விட்டான். இருந்தாலும் இன்னமும் அவனுக்கு பேய் பற்றிய பயம் ஓயவில்லை.

ஒருநாள் பிச்சைக்காரன் அந்தப் பையனை ஒரு வேலை காரணமாக வெளியூருக்கு அனுப்ப வேண்டியிருந்தது. அவன் அந்தச் சுடுகாட்டைத் தாண்டிப் போயாக வேண்டும். இராத்திரி நேரம் இவன் பயந்து நடுங்க ஆரம்பித்தான். இப்பொழுது என்ன செய்வது என்று யோசித்தான் அந்தப் பிச்சைக்காரன்.

ஒரு தாயத்தை எடுத்து அந்தப் பையனின் கையில் கட்டினான். கட்டிவிட்டு "இனிமேல் அந்தப் பேய்கள் உன்னை ஒன்றும் பண்ணமுடியாது. கடவுள் அந்தப் பேய்களிடமிருந்து உன்னைக் காப்பாற்றுவார்." என்றான்.

இப்ப அந்தப் பையனுக்கு தைரியம் வந்தது. துணிச்சலாக கிளம்பி போய்விட்டான். அப்படிப் போகும் போது யோசித்தான்.

''இப்ப... நாம... பேய்களைப் பார்த்து பயப்படுகிறோம்...இந்தப் பேய்களே கடவுளைப் பார்த்துப் பயப்படும் என்றால் அந்தக் கடவுள் எவ்வளவு பெரிய பேயாக இருக்கனும்...'' இப்படி நினைக்க ஆரம்பித்தான். உடனே பேய்ப் பயத்தை விட கடவுள் பயம் அதிகமாகப் போய்விட்டது. அதேபயம்! கடவுளின் தரகர்கள் மாதிரி நடிக்கிற போலி மனிதர்கள் மீதும் ஏற்பட்டுப் போச்சு! பாவம் அந்தப் பையன். இரவில் பேய்க்காக பயந்தான். பகலில் மகா பேயான கடவுளுக்காக பயந்தான்.

போலிச்சாமியார்களைப் பார்த்தும் பயப்பட ஆரம்பித்தான். இப்பத்தான் அந்தப் பிச்சைக்காரன். விபரீதத்தை உணர்ந்தான். அந்த பையன் கையில் கட்டிய தாயத்தை கழற்றி அவனுக்கு முன்னாலேயே அடுப்பில் வீசினான். அன்றிரவே அவனை அழைத்துக் கொண்டு அந்த சுடுகாட்டுக்குப் போனான். அங்கே போய் பேய் –பிசாசு எதுவும் இல்லை என்பதை சுட்டிக்காட்டினான். எதற்காக பேயைப்பற்றிச் சொன்னேன்– எதற்காக தாயத்தைக் கட்டி விட்டேன் – என்ற உண்மையை விபரமாகச் சொன்னான். அந்த இளைஞனுக்கு இப்பொழுது மனதில் ஒரு தெளிவு உண்டாயிற்று.

அவன் மனதுக்குள் இருந்த பேய்– பிசாசு பற்றிய எண்ணங்களெல்லாம் பேய்ற்று பயத்தினால் உருவான போலிக் கடவுளும் ''போய்விட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு போய்விட்டார்.

மனிதனுக்கு 'தான்' என்ன எண்ணம் இருக்கு பாருங்க. அதனால் உருவாகும் துன்பங்கள் , கவலைகள், பாதுகாப்பற்ற நிலை, மரணபயம் இதிலிருந்து தப்பிப்பதற்கு கடவுளே கதி என்ற சரணாகதி நிலையை அவன் உருவாக்கிக் கொள்கிறான் என்கிறார் அந்தப் பெரியவர்.

இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

இந்தக் காலத்திலேயும் பேய் – பிசாசு எல்லாம் ரொம்ப சர்வ சாதாரணமாக விட்டது. அன்றைக்கு ஒருத்தனைப் பார்த்து,

'' ஏன்சார் நீங்கள் பேயைக் கண்ணால் பார்த்திருக்கிறீர்களா? என்று கேட்டேன். அவன் மெதுவாக என்னிடம் வந்து,"என்ன அப்படிக் கேக்கிறீங்க... நான் அது கூடத் தானே 30 வருஷமா குடும்பம் நடத்திக் கொண்டு வாறேன்!'' என்று சொல்லிவிட்டு அலட்டிக் கொள்ளாமல் சென்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி அடுத்த மாத முதல் வாரத்தில் வெளியிடப்படும்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விபரங்களை அடுத்த மாத முதல் வாரத்தில் வெளியிட எதிர்பார்ப்பதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயர்தரப்பரீட்சை மீள் திருத்தப் பெறுபேறுகள் இன்னும் தமக்குக் கிடைக்கவில்லையெனவும் மீள் திருத்தப்பெறுபேறுகள்கிடைத்தவுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளை வெளியிட முடியுமெனவும் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

அனேகமான பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளை இம்முறை ஏககாலத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் அது 100 வீதம் சாத்தியப்படுமா என்பது தெரியவில்லையெனவும் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

பேராதனை மற்றும் மொறட்டுவைப் பல்கலைக்கழகங்களின் இவ்வாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் ஏக காலத்தில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (2-6)

## மகோற்சவமும் தெய்வீகப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத்திருவிழாவும் சப்பறமும், 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

இதில் கொடியேற்றத் திருவிழா முதல் 7ஆம் திருவிழா வரை தினமும் மாலை 6.30 மணிக்கு அதிபர் ச.லலீசன் மற்றும் கு.பாலசண்முகன் ஆகியோரின் தெய்வீகப் பேருரை இடம்பெறவுள்ளதுடன் இரதோற்சவம் அன்று காலை 11 மணிக்கு மாணவர்களுக்கான சமய அறிவுத்தேர்வும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலனசபை தலைவர் அறிவித்துள்ளார். (6-4)

## முதலாம் தரத்தில் மாணவர்களை சேர்ப்பித்தலுக்கான சுற்றறிக்கையில் மீள் திருத்தம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான சுற்றறிக்கையில் மீளவும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுற்றறிக்கையில் மேற்கொள்ளப்பட இருக்கின்ற திருத்தங்கள் அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் முதலாம் ஆண்டிற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாத மளவில் கோரப்படவிருக்கின்றன அந்த விண்ணப்பங்கள் புதிய சுற்றறிக்கையின் பிரகாரமே கோரப்படும் என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை 2010 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு பாடசாலை கிடைக்காமல் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளவர்கள் அது தொடர்பில் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக மேன்முறையீடு செய்யலாம் என கல்வியமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-6)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என சுன்னாகம் மின்சார சபையின் மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதில் சுன்னாகம் பகுதி, குப்பிளான் , மயிலங்காடு, ஏழாலைப் பகுதி , கட்டுவன், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சி பிரதேசம் ஆகிய இடங்களில் மின்தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## இராசி பலன்


14-05-2010
(சித்திரை 31, வெள்ளிக்கிழமை)
அமாவாசை முற்பகல் 7.19மணிவரை
கார்த்திகை பின்னிரவு 2.50 மணிவரை
இராகுகாலம் 10.23-11.53 மணிவரை
சுபநேரம் 5.53-7.23 மணிவரை
கார்த்திகை விரதம்.

| | |
|---|---|
| மேடம் | வேளைச்சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம், விவாதம். |
| இடபம் | தெய்வதரிசனம், நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, கற்பனை மிகுதி. |
| மிதுனம் | காரியதாமதம், தொய்வசிந்தை, மனச்சோர்வு, பிறருக்கு உதவி செய்தல். |
| கடகம் | நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம், தனவருவாய், தெய்வதரிசனம். |
| சிங்கம் | காரிய அனுகூலம், தெய்வதரிசனம், நண்பர்கள் உதவி, மனமகிழ்ச்சி. |
| கன்னி | தந்தை வழி உறவு, உத்தியோக பலிதம், திடீர் பயணம், புதிய முயற்சி. |
| துலாம் | மனக்கவலை, முயற்சிதாமதம், வாகன பயம், பணக்குறைவு. |
| விருச்சிகம் | தொழில் முன்னேற்றம், நல்ல செய்தி, களஸ்திர நன்மை, தெய்வதரிசனம். |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், உடல் நலம், போசன சுகம், தெய்வசிந்தை. |
| மகரம் | அஜீரணரோகம், கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், பணவிரயம். |
| கும்பம் | ரோகநிலை, செய்தொழில் விருத்தி, சுபசெலவு, மனசஞ்சலம். |
| மீனம் | கூட்டு முயற்சி, தெய்வதரிசனம், பிரயாணம், கீர்த்தி. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 90 |
| தக்காளி | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 |
| கோவா | 50 | 60 |
| கரட் | 100 | 120 |
| பூசணி | 30 | 40 |
| புடோல் | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 |
| பாகற்காய் | 80 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 60 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 |
| பயிற்றங்காய் | 30 | 45 |
| லீக்ஸ் | 80 | 90 |
| பீற்றூட் | 50 | 60 |
| கறிமிளகாய் | 80 | 90 |
| முருங்கைக்காய் | 220 | 240 |
| போஞ்சி | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |





சாவகச்சேரி பிரதேச சபையினால் உலக புத்தக தினத்தை முன்னிட்டு உயர்தர மாணவர்களுக்கான வரலாற்றுப்பாட விரிவுரை அண்மையில் கச்சாய் பொது நூலகத்தில் நடத்தப்பட்டது. இதில் விரிவுரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் எஸ். உதயசாந்திக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி கௌரி விக்கினகுமார் நினைவுப்பரிசில் வழங்குவதையும், விரிவுரையில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## 'பைந்தமிழைப் பாதுகாப்போம்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சிலேடைக் கவிமணி க.கணபதிப்பிள்ளை எழுதிய "பைந்தமிழைப் பாதுகாப்போம்" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய நல்லதம்பி மண்டபத்தில் அதிபர் இ. இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா ஆகியோர் வழங்கவுள்ளதுடன் நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஆங்கில முதுநிலை விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தி வழங்கவுள்ளார். (6-4)

## சுட்டெரித்திடும் 'கத்திரி வெயில்'

(யாழ்ப்பாணம்)

தற்போது இந்தியாவின் மீது 'உச்சம் கொண்டுள்ள கத்திரி வெயிலின் தாக்கமே எம்மை சுட்டெரிப்பதாகவும் இவ் வெயிலின் தாக்கம் இம்மாத இறுதிவரை தொடரும் வாய்ப்புள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றும் நேற்று முன்தினமும் 35 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது மேலும் இம்மாத நடுப்பகுதியில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட தென்மேற்கு பருவக் காற்று வீசினால் வெப்ப நிலை குறைய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## மூத்த விநாயகர் சனசமூக நிலைய பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் ந. ஸ்ரீரஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (4)

## வலயக்கல்வி அலுவலர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு

(அல்வாய்)

மாகாண கல்வித்திணைக்களத்தினால் வலயக் கல்வி அலுவலர்களுக்கான இருமொழிக் கொள்கை தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

கல்வி அமைச்சின் இருமொழிக் கல்வி அலகினால் வலயக் கல்வி அலுவலர்களுக்கான மேற்படி விழிப்புணர்வுச் செயலமர்வு மாகாண மட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு கல்வி வலயத்திலும் கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர், இருமொழிக் கல்வி இணைப்பாளர், விஞ்ஞான கணித உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் உட்பட மொத்தம் 5 பேர் மேற்படி செயலமர்வில் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கெள்ளப்பட்டுள்ளது.

இச் செயலமர்வு எதிர்வரும் 21,22 ஆகிய திகதிகளில் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது என வடமாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (4-19)

## நாயன்மார் நால்வர் எழுந்தருளல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டு மக்கள் நன்மைக்காக வேண்டிப் பிரார்த்தித்து யாழ்.குடாநாட்டு ஆலயங்கள் தோறும் நாயன்மார் நால்வரை எழுந்தருளச் செய்து மாதம் ஒருகோயில், மாதம் ஒரு திருமுறை முற்றோதலென பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றனர்.

அந்த வகையில் நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் இணுவில் ஸ்ரீ விசாலாட்சி சமேத ஸ்ரீ விஸ்வநாதர் ஆல யத்திற்கு நாயன்மார் நால்வர் அழகிய சுந்தரமுத்து பல்லக்கில் எழுந்தருளி ஆலயத் தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று கந்தையா பிள்ளை சிவபாலன் தலைமையில் இரண்டாம் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகும்.

தினமும் காலை 8 மணிக்கு நடைபெறும் ஆலயப் பூசையைத் தொடர்ந்து முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (4)

## 20 வருடங்களின் பின் இடம்பெறவுள்ள பலாலி ஆரோக்கியமாதா ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

பலாலிப்பகுதியில் அமைந்துள்ள ஆரோக்கியமாதா ஆலயத்திருவிழாவை நடத்த பாதுகாப்புப் படையினர் அனுமதியளித்துள்ளனர்.

இதற்கமைய ஆலயத் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளதாக ஆலய சபையினர் தெரிவித்துள்ளனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இந்த ஆலயப் பகுதிக்கு இருபது வருடங்களின் பின் காலடி வைப்பதையிட்டு மிகவும் புளகாங்கிதம் அடைவதாக விழா ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளதுடன் அன்னையின் திருவிழாவில் கலந்துகொண்டு இறையாசியை பெறுமாறு அனைவரையும் அழைக்கின்றனர். எனவே பங்குகொள்ள விரும்பும் மக்கள் நாளை காலை 6.30 மணிக்கு தொண்டைமானாறு கடற்கரைச் சந்தியில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (2)

## கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டி முடிவுகள்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான தடகளப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரர்களின் பெயர் விபரங்களை கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

**100 மீற்றர் ஓட்டம்**

ஏ.இ.அமல்ராஜ்- நவசக்தி வி.க., ஆர்.முரளிதரன் -மைக்கல் வி.க., எஸ். சஞ்சயன் -இமையாணன் மத்தி வி.க.

**200 மீற்றர் ஓட்டம்**

ஆர்.முரளிதரன்-மைக்கல் வி.க., கி.தயாபரன் - யங்கம்பன்ஸ் வி.க., ஆர்.ராம்கி -இமையாணன் வி.க.

**400மீற்றர் ஓட்டம்**

ஆர். முரளிதரன் - மைக்கல் வி.க., எஸ்.சுகிர்தரன் -கலட்டி ஐக்கியம் வி.க., எஸ்.குமரன் -இளங்கோ வி.க.

**800மீற்றர் ஓட்டம்**

எல்.சுகிர்தன்- கலட்டி ஐக்கியம் வி.க., கே.அமுதசுதன் -மைக்கல் வி.க., கே. சிவசுதன் - அண்ணாசிலையடி வி.க.

**1500 மீற்றர்ஓட்டம்**

கே.அமுதசுதன் -மைக்கல் வி.க., கே.பிரிந்தன் - நவஜீவன் வி.க., ஜெ.ஜெகன் - அண்ணாசிலையடி வி.க.

**5000 மீற்றர் ஓட்டம்**

எஸ். சண்முகதாஸ் - மொம்மர்ஸ் வி.க., பி.இ.தர்சன்-அண்ணாசிலையடி வி.க., கே. அமுதசுதன் மைக்கல் வி.க.

**10000 மீற்றர்ஓட்டம்**

எஸ்.சண்முகதாஸ் , எஸ்.சண்முகவேல் - மொம்மர்ஸ்விக,ரிகௌதீபன்-இமையாணன்விக

**குண்டெறிதல்**

எஸ்.அரிகரன் -மைக்கல் வி.க.,என்.பகிர்தரன் -மொம்மர்ஸ் வி.க., எஸ்.பிரகாஷ் - யங்கம்பன்ஸ் வி.க.

**தட்டெறிதல்**

எஸ்.அரிகரன் -மைக்கல் வி.க.,ஆர்.ரமணன் -மொம்மர்ஸ் வி.க. , எஸ்.பிரகாஷ் - யங்கம்பன்ஸ் வி.க

**கோலூன்றிப் பாய்தல்**

ரி.பிரபு-நவஜீவன் வி.க., ரி.விமலேஸ்வரன் -உடுப்பிட்டி யூத் வி.க., எஸ்.பிரகாஷ்-மைக்கல் வி.க.

**நீளம்பாய்தல்**

ஜி.ஏ. அமல்ராஜ் -நவசக்தி வி.க.,என். கஜேந்திரன் - இமையாணன் வி.க. கே. நிகிர்தன் -நவஜீவன் வி.க

**உயரம் பாய்தல்**

ரி.விதுசாந், ரி.கௌதமன்-நவஜீவன் வி.க.,கே.குகதரன் -யங்கம்பன்ஸ் வி.க.

**4X100 அஞ்சல் ஓட்டம்**

இமையாணன் -மத்தி வி.க.,மைக்கல் வி.க. , நவஜீவன் வி.க

**4X 400 அஞ்சல் ஓட்டம்**

இளங்கோ வி.க., நவஜீவன் வி.க., அண்ணா சிலையடி வி.க.

தடகளப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கழகங்கள்,

மாலுசந்தி மைக்கல் -வி.க.,நவஜீவன் வி.க., இமையாணன் மத்தி வி.க. (4-24)

### யாழ்.செய்திகள்

## புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி படிப்பகத்தின் 43 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக பூ.அகமணிதேவர், உபதலைவர்களாக கி.மகாலிங்கம், பா.சோதிநாதன், செயலாளராக செல்வன் த.மிரேஸ், உபசெயலாளராக ச.ஜெயகணேஸ், பொருளாளராக சி.மதிசூதனன் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக திருமதி ப. இலங்கேஸ்வரி ம.உதயகுமார், வே. கண்ணதாசன், ச.ரமேஸ்குமார், செல்வன் உ.துரைராஜ், செல்வன் கு.ஞானவேல், செல்வன் ப.தனுராஜ் ஆகியோரும் கணக்காய்வாளராக ந.சிவனருள்காந்தி, காப்பாளர்களாக திருமதி வி.சந்திரயோகன், வைத்தியகலாநிதி க.மயிலேறும்பெருமாள் சூ.சே. குலநாயகம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (6-4)

# மருந்து தட்டுப்பாடு பெருமளவில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு பூராவும் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு பெருமளவில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது.

குறுகிய கால அவகாசத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்து வகைகளை நாடு முழுவதிலும் உடனடியாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பிரதி சுகாதார அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது,

சுகாதார அமைச்சர் தலைமையில் வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு தொர்பாக ஆராய்ந்ததாகவும் தட்டுப்பாடு நிலவும் வைத்தியசாலைகளுக்கு அவற்றைத் துரிதமாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் மருந்துப் பொருட்கள் தொடர்ந்தும் இலங்கைக்குக்கொண்டு வரப்படுவதாகவும் அவற்றை விரைவாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் போதுமானதாக இல்லையெனச் சுகாதார சேவைகள் தொழிற்சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் மருந்துத் தட்டுப்பாடு நிலவு வதாகவும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீண்டகாலக் கொள்கையொன்று அவசியமெனவும் அவர் மேலும் கூறினார். (2-6)

# சின்னப்பண்டிவிரிச்சான் மக்களின் மீள்குடியேற்றலுக்கான அடிப்படை வசதிகள்

சின்ன பண்டிவிரிச்சானில் இருந்து மடுவுக்குப்போய் வருவதற்கான பஸ் போக்குவரத்து சேவை அதிகரிக்கப்படவேண்டும் என்றும் குடிநீர் வசதிக்காக கிணறுகளைச் சுத்தம் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் நடமாடும் வைத்திய சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் சின்ன பண்டி விரிச்சானில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்கள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்கள் நினைத்த நேரத்தில் மடுவுக்கோ அல்லது அந்தப் பிரதேசத்தின் பிரதேச செயலக அலுவலகத்திற்கோ சென்று வருவதற்கு வசதியாக சைக்கிள்கள் வழங்கினால் பேருதவியாக இருக்கும் என்றும் அந்தக் குடும்பங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சின்ன பண்டிவிரிச்சானைச் சேர்ந்த 68 குடும்பங்கள் அங்கு மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் ஒரு சில குடும்பங்களே தமது காணிக்குச் சென்றுள்ளதாகவும் ஏனைய குடும்பங்களின் காணிகளில் முழுமையாகக் கண்ணி வெடி அகற்றப்படாததனால் அக்குடும்பங்கள் சின்ன பண்டி விரிச்சான் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மீளக் குடியமர்த்துவதற்காகச் சென்றுள்ளவர்கள் தம்மிடம் தெரிவித்ததாக செல்வம் அடைக்கலநாதன் கூறினார்.

கண்ணிவெடிகளை முழுமையாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அந்தப் பிரதேசத்தில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள மெக் நிறுவனத்தினர் ஓரிரு தினங்களில் அந்தப் பணிகளைச் செய்து முடிப்பார்கள் எனவும் மடு ஆலயத்தின் உதவி பரிபாலகரிடம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீளக் குடியேற்றப்பட்டுள்ள குடும்பங்களின் அவசர வைத்திய தேவைக்காக மடுக் கோயிலில் அம்புலன்ஸ் வண்டியொன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் எந்த வேளையிலும் அது அவசர நோயாளிகளை சின்ன பண்டிவிரிச்சானில் இருந்து ஏற்றிச் செல்வதற்கு தயார் நிலையில் இருப்பதாகவும் மடு ஆலய பரிபாலகர் தெரிவித்துள்ளார்.

குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தேவையான குடிநீர், உலருணவு அத்தியாவசிய பாத்திரங்கள் உட்பட்ட பொருட்கள் காடுகளை அழிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் என்பனவும் அரசாங் கத்தி னால் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய அடிப்படை வசதிகளை படிப்படியாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சின்ன பண்டி விரிச்சா னுக்கு அடுத்ததாக அமைந்துள்ள பெரிய பண்டி விரிச்சான் கிராமத்தில் அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் ஓரிரு வாரங்களில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளதாகவும் அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# அரசியல் இலாப நோக்கத்துக்கான வாதங்களை கைவிட வேண்டும்

## தகவல் ஊடகத்துறை அமைச்சர் வேண்டுகோள்



(கொழும்பு)

அரசியல் இலாப நோக்கங்களின் அடிப் படையில் தங்களுக்கு புள்ளி சேர்ப்பதற்காக விடயத்துக்கு சம்பந்தமில்லாத வாதங்களில் ஈடுபடுவதை அரசியல்வாதிகள் கைவிட வேண்டும் என வேண்டுகோள் விடுப்பதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடை பெற்ற போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் பிரதீப் எக்நெலிகொட காணாமல் போயுள்ள விடயம் தொடர்பாக புதிய ஊடக அமைச்சர் என்ற வகையில் என்ன கூறுகின்றீர்கள் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில்,

அவ ருடைய விடயம் குறித்து தாம் திட்டவட்டமாக கவனம் செலுத்தி வருவதாக குறிப்பிட்டார். மேலும் இவ்விடயம் குறித்து பாராளுமன்றத்திலும் கவனம் செலுத்தப்பட்டகவும் இவ்விடயம் தொடர்பாக எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பிய போது பதிலளித்த சிலர், பழைய சம்பவங்களை நினைவு கூர்ந்து வாத விவாதங்களை முன்வைத்தனர். எனவும் தெரிவித்தார்.

இது அவர்களுக்கு அரசியல் இலாபம் தேடுவதாகவே அமைந்ததேயன்றி உண்மையான விடயத்தில் கவனம் செலுத்தப்படவில்லை எனவும் எடுத்துக்கொண்ட விடயம் அப்படியே அடிப்பட்டு போய்விட்டது எனவும் இந்த நிலை மாறவேண்டும் என்பதே தம்முடைய தாழ்மையான வேண்டுகோள் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2-6)

# வத்தளை பள்ளியவத்தையை சேர்ந்த குழந்தையை காணவில்லையென முறைப்பாடு

களனி ரஜமகா விகாரையில் காணாமல் போன குழந்தை மீண்டும் பெற்றோரிடம் கிடைத்த மகிழ்ச்சியான செய்தியின் மத்தியில் மற்றொரு சிறு பிள்ளை காணமல்போன கவலையான செய்தியொன்று கிடைத்துள்ளது.

வத்தளை பள்ளியவத்தைப் பகுதியைச் சேர்ந்த சித்தும் சத்சர எனும் ஒன்றரை வயதான ஆண் குழந்தை இவ்வாறு காணா மல் போயுள்ளது.

குடும்பத்தில் கடைசிப் பிள்ளையான இந்தச் சிறுவன் கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்கிழமை தனது பாட்டியுடன் வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தபோது காணாமல் போயுள்ளான்.

சிறுவனின் வீடு களனி ஆறு கடலில் கலக்கும் கழிமுகத்திற்கு அருகிலிருப்பதால் கடற்படையினரின் உதவியுடன் இச் சிறுவனைத் தேடியுள்ளனர்.

தேநீர் தயாரித்துவிட்டு பிள்ளையைத் தேடிய போது அவனைக் காணவில்லையென குழந்தையின் பாட்டி தெரிவித்தார்.

பிள்ளையை எல்லா இடத்திலும் தேடிப் பார்த்தும் பிள்ளை கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கும் அவனின் தாயார் குழந்தை இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும். இதனால் மாதத்திற்கு ஒரு முறை வைத்தியரிடம் மருந்து எடுத்துக் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

இது தொடர்பாகப் பொலிசாரிடம் கேட்ட போது பிள்ளை கடத்தப்பட்டதா அல்லது களனி ஆற்றில் தவறி விழுந்ததா என்பது பற்றி விசாரணை செய்து வருவதாகக் குறிப்பிட்டனர். (2-6)

# மட்டக்களப்பு, திருமலை, ஓமந்தை, மாங்குளம் பகுதிகளில் பொருளாதார வலயங்கள்

## முதலீட்டுசபை பிரதிப்பணிப்பாளர் தகவல்

(மட்டக்களப்பு)

திருகோணமலை பகுதிகளில் பொருளாதார வலயங்கள் அமைப்பதற்கான காணிகள் அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் ஓமந்தை, மாங்குளம் ஆகிய பகுதிகளில் தலா 400 ஏக்கர் நிலப்பரப்பில் இரு பொருளாதார வலயங்களை அமைப்பதற்கான முன்னேற் பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை முதலீட்டு சபை பிரதிப்பணிப்பாளர் நாயகம் ஏ.எம். சி.குலசேகர தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதால் கூடுதலான நாடுகள் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் முதலீடு செய்வதற்கு முன்வந்துள்ளன.

வடக்கு- கிழக்கு பிரதேச அபிவிருத்தியை துரிதப்படுத்தும் நோக்குடன் அப்பகுதியில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கவுள்ளதாக அவர் கூறினார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

இன்று முழு நாட்டிலும் மீன்பிடிக்கவும், சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கவும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கில் விவசாயத்துறையும் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இந்த நிலையில் அதிகமான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வடக்கு -கிழக்கில் முதலீடு செய்ய முன்வந்துள்ளனர். இப்பகுதியில் முத லீடு செய்பவர்களுக்கு 15 முதல் 20 வருட வரிவிலக்கு வழங்கப்படுவதோடு தீர்வையற்ற முறையில் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களை தருவிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கில் முதலீடு செய்வ தற்கு பல முதலீட்டாளர்களுக்கு இது வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனையின் கீழ் 12 பொருளாதர வலயங்கள் நாடு பூராகவும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பொருளாதர வலயங்களில் பல்வேறு கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்றார். (6)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 | 14 |
| 08 | 04 |
| 1964 | 2010 |

### அமரர் மார்க்கண்டு ஸ்ரீரவிகுலன் (ரவி)

கடந்த 14.04.2010 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூல மும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போச னத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்
குடும்பத்தினர்.





ஓம் சக்தி

சுழிபுரம் -கம்பனை

### ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தி விஞ்ஞாபனம்

காலம் -வெள்ளிக்கிழமை :- 14.05.2010
காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகம் (1008)



தொடர்ந்து விசேட பூஜை, பிரசாதம் வழங்கல்.
மதியம் அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.
மாலை 5.30 மணிக்கு சாயரட்சை பூஜை அதனைத் தொடர்ந்து தீப ஆராதனையுடன் அம்பாள் முத்துமணிச் சப்பறத்தில் திருவீதி உலா வருதலும் இடம்பெறும்.
விசேட நிகழ்வாக மங்கள வாத்தியம்.

- சிவகுமார் குழுவினர்- வழக்கம்பரை
- ஈழு நல்லூர் நாதஸ்வரசக்கரவர்த்தி பாலமுருகன் குழுவினர்

அனைத்து அம்பிகை அடியார்களும் வருகை தந்து அம்பாள் அருள் பெறுக.

உபயகாரர்கள்.

(1389)

பேராசிரியர் என்.நடராஜ சுந்தரம் ஆளுநர் விருது பெற்றமைக்காக அவரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் புலோலி மேற்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் விழாநாயகனுக்கு மாலை அணிவித்து கௌரவிப்பதையும் கலாபூசணம் செ.மாணிக்க வாசகர் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-மருதங்கேணி செய்தியாளர்)

## முல்லை.கரைதுறைப்பற்று பி.செ.பிரிவைச் சேர்ந்த மக்களுக்கான மீள் குடியேற்ற நடவடிக்கைகள்

(கொழும்பு)

இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்யும் நடவடிக்கைகளில் ஒரு கட்டமாக நாளை ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் மீள் குடியேற்றப் படவுள்ளனர்.

இது தொடர்பாக திட்டமிடல் பிரிவு உதவிப் பணிப்பாளர் சாந்தினி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவிக்கும் போது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது வவுனியா மற்றும் ஏனைய மாவட்டங்களில் உறவினர் நண்பர்கள் வீட்டில் தங்கியிருக்கின்ற வற்றாப்பளை, முல்லைத்தீவு பட்டணம், முல்லைத்தீவு மத்தி, முள்ளியவளை மத்தி, முல்லைத்தீவு தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு , வண்ணாண்குளம், முள்ளியவளை மேற்கு, தண்ணீரூற்று மேற்கு, முள்ளிவளை தெற்கு, குமிழமுனை மேற்கு, முள்ளியவளை கிழக்கு, செல்வபுரம், பதறிகுடா, மணல் குடியிருப்பு, உப்புமாவெளி ஆகிய 17 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்படவுள்ளதாகவும் அத்துடன் ஒட்டிசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த தற்போது முகாம்களில் வசிக்கின்ற பெரிய மடு பெரியகுளம் கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த மக்களை யும் மீள் குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் ஒரு தொகுதி மக்கள் மீள் குடியேற்றம் செய்யப் பட்டுள்ளதாகவும் [illegible]

மேலும் ஒட்டிசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்களுடன் தங்கியிருக்கின்ற 16 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 200 குடும்பங்களை கொண்ட 484 அங்கத்தவர்களை நாம் அவர்களுடைய சொந்த கிராமங்களுக்கு மீள் குடியேற்றுவதற்காக ஒட்டிசுட்டான் மகாவித்தியாலத்தில் தங்க வைத்துள்ளோம் என்று தெரிவித்தார். (2-4)

## நாவன்மைப்போட்டி

(சாவகச்சேரி)

சரசாலை இந்து மன்றம் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு நடத்தும் சைவ சமய அறிவு நாவன்மைப்போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் க. சிவங்கரநாதன் தெரிவித்துள்ளார். (2-6)

## புலிகளுக்கு நிதி சேகரித்தவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்

(கொழும்பு)

புலிகளின் செயற்பாடுகளுக்காக கனடாவில் நிதிசேகரித்த பிரபாகரன் தம்பித்துரை என்ற புலிகளின் கனேடிய செயற்பாட்டாளர் தனது குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக்கொண்டுள்ளார்.

கனடாவில் ஒன்ராறியோ மாநிலத்தின் மேபிள் சிற்றியில் வசித்துவந்த பிரபாகரன் தம்பித்துரை என்பவர் கனடாவின் பிறிதொரு மாநிலமான வன்கூவர் மாநிலத்தில் வசிக்கும் தமிழ்மக்களிடம் புலிகளின் செயற்பாடுகளுக்காக நிதி சேகரித்தார் என்ற குற்றச்சாட்டில் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் வன்கூவர், வெஸ்ற்மினிஸ்ரர் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தான் மனிதாபிமான உதவிக்காகவே நிதி சேகரிப்பில் ஈடுபடுவதாக தெரிவித்து வந்த தம்பித்துரை பிரபாகரன் இறுதியில் தான் சேகரித்த பணத்தில் அரைவாசியை புலிகளின் செயற்பாடுகளுக்காக வழங்கியதை ஒப்புக் கொண்டுள்ளார்.

புலிகளின் செயற்பாடுகளுக்கு கனடாவில் நிதி சேகரித்தார் என்ற குற்றம் சுமத்தப்பட்டு தண்டனையை அனுபவிக்கவுள்ள முதல் புலி உறுப்பினர் இவர் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

## முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கான ஓய்வூதிய திட்ட நடவடிக்கை


முச்சக்கர வண்டிச் சாரதிகளை உள்ளடக்கும் வகையில் ஓய்வூதியத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. முச்சக்கரவண்டிச் சாரதிகளதும் அவர்களது குடும்பத்தினரதும் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமெனப் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது சகலருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படுமென ஜனாதிபதி அறிவித்தமைக்கு அமைய இந்த ஓய்வூதியத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகப் பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

நிதியமைச்சின் சமூக பாதுகாப்புத் திட்டத்துடன் இணைந்து போக்குவரத்து அமைச்சு இந்த திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் முச்சக்கரவண்டிச்சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் இத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (2-6)

## பாடசாலை விஞ்ஞான செயற்றிடங்களை முன்னெடுக்க யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் என்றும் உதவும்

## கலாநிதி கு.மிகுந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தோற்றம் எங்களூரில் விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டது என்பதனை நாம் எல்லோரும் அறிவோம்.

இவ்வாறு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பாடசாலை விஞ்ஞான செயற்றிட்ட தெரிவுத்தலைவர் கலாநிதி கு.மிகுந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்த பேராசான் அ.துரைராசா தலைமையில் பல்கலை அறிஞர்கள், புலமையாளர்கள் என பலர் கூடி ஆரம்பித்த இவ் விஞ்ஞான சங்கம் பல ஆக்கபூர்வமான பணிகளை குறிப்பாக பாடசாலை மாணவர்கள், பல்கலை மாணவர்கள், பொதுமக்கள் என பல தரப்பினருக்காக அவர்களது தேவைகளை இனங்கண்டு திட்டமிட்டு செய்து வருகின்றது.

இதுவரையிலும் ஒவ்வொரு ஆண்டும் புத்தொளி பெற்று பொறுப்பேற்கும் செயற்குழுக்களின் அர்ப்பணிப்புடனான செயற்பாடுகளினால் பல அரிய செயற்றிட்டங்கள் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் ,அதிபர்கள், மாணவர்கள் என அனைவரையும் ஒன்றிணைத்த கல்விச் சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்டமையை இவ்விடத்தில் நினைவு கூருவது பொருத்தமானது.

பாடசாலை மாணவர்களுக்கிடையே விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதில் குறிப்பாக இடர்காலத்தின் போது யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தருமணமறிந்து, தேவையறிந்து செயற்பட்டதனை நாமனைவரும் பாராட்டவே வேண்டும்.

இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் மனமுவந்து பாராட்டும் அதேவேளையில் இவ்வருடமும் தேவையறிந்து பாடசாலை விஞ்ஞான செயற்றிட்டங்களை முன்னெடுக்க யாழ்ப்பாண விஞ்ஞான சங் கம் விரும்புகின்றது.

ஆரம்பகாலங்களில் பேச்சு போட்டி, கட்டுரைப் போட்டி, வினாவிடைப் போட்டி மற்றும் கண்காட்சிப் போட்டி என பலவாறாக நடாத்தப்பட்ட செயற்றிட்டங்கள் பின்னர் மாணவர்களது தேவைக்கேற்ப கனணிசார் தகவல் தொழில் நுட்பத்தின் விருத்தியை மையமாகக்கொண்ட போட்டிப் பரீட்சைகளாக மாற்றம் பெற்றிருந்தது.

பலரது அயராத உழைப்புக்குக் கிடைத்த வெற்றியாகவே கடந்த கால விஞ்ஞான செயற்றிட்டங்கள் அமைந்திருந்தன என்பதனை குறிப்பிட்டுக் கூறலாம்.

கடந்த கால அனுபவங்களை உள் வாங்கி இவ்வருடத்துக்கான பாடசாலை விஞ்ஞான செயற்றிட்டங்களை வடிவமைக்க யாழ்ப் பாண விஞ்ஞான சங்கத்தின் செயற்குழு விரும்புகிறது. இது சார்ந்த கருத்துக்களை பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் மற்றும் பொதுமக்கள், புலமையாளர்கள் என பல தரப்பிடமிருந்தும் அறிய ஆவல் கொண்டுள்ளோம்.

உங்கள் தேவைகளையறிந்து அவற்றை நிறைவேற்றும் உத்வேகத்தில் இம்முறை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் இதற்கான செயற் குழு திட்டமிடவிருக்கும் இந்நிலையில் குறிப்பாக மாணவர்களின் தேவையறிந்து செயற்பட விரும்புகின்றோம். உங்கள் தேவைகளை எங்களுக்கு அறியத்தாருங்கள் முடிந்தவரை அவற்றை செயலுருவாக்க முயற்சிப்போம். உங்கள் கருத்துகளை கலாநிதி கு.மிகுந்தன், விவசாயபீடம், யாழ்ப்பாண பல்கலைக் கழகம், அல்லது கலாநிதி அபிமான், இராயனவியல் துறை, விஞ்ஞான பீடம் யாழப்பாண பல்கலைக்கழகம் எனனும் முகவரிக்கும் jsa.ssp@hotmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பலாம். உங்கள் கருத்துக்கள் இவ் வருட பாடசாலை விஞ்ஞான செயற்றிட்டங்களுக்கு வலிமை சேர்ப்பதாகவும் திட்டமிடு வதற்கு வழிகாட்டுவனவாகவும் இருக்கும்.

இம் முறை பாடசாலை விஞ்ஞான செயற்றிட்டங்களை யாழ்குடாநாடு,தீவகம், கிளிநொச்சி, மன்னார் , முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கும் விஸ் தரிக்க எண்ணியுள்ளோம். இடர்கால அனர்த்தங்களில் சிக்குண்டு தவிக்கும் மாணவ மாணவியருக்கு கைகொடுத்து உதவிட யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் என்றுமே விருப்பங் கொண்டுள்ளது கடமையுங் கூட. வாருங்கள் எங்களுடன் இணைந்து இந்நிகழ்வை சிறப்புற நடத்திட உங்களை அனைவரையும் அன்புடன் வருவேற்கின்றோம்.

## வன்னி இறுதிப்போரில் பாதிக்கப்பட்டோரின் விபரங்கள் திரட்டல்

போரினால் பாதிக்கப்பட்டடு அவயங்களை இழந்தவர்கள், பார்வையிழந்தவர்கள், குடும்பத் தலைவர்களை இழந்தவர்கள், விதவைகளாக்கப்பட்டவர்கள் போன்றோரின் விபரங்களைத் திரட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் பலர் முகாம்களிலும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள பிரதேசங்களிலும் உறவினர் நண்பர்களது வீடுகளிலும் செய்வதறியாமல் துன்பத்தில் மூழ்கியிருப்பதாகவும் அவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டி அவர்களுக்கு உடனடியாகத் தேவைப்படுகின்ற உதவிகளை வழங்க வேண்டிய கட்டாயமான கடமை அனைவருக்கும் உண்டு என்றும் இதன் முதற்படியாக இவ்வாறானவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்கள் தமது விபரங்களை அந்தந்தப் பகுதி கிராம சேவகரிடம் அல்லது அவர்களைத் தேடிவருபவர்களிடம் வழங்கி ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## இன ஐக்கியத்தை கருத்தில் கொண்டு அனைத்து கட்சிகளும் செயற்பட வேண்டும்

### ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்- சிங்கள மக்களிடையே தற்போது காணப்படும் ஒற்றுமையை சீர்குலைக்காது இன ஐக்கியத்தையும் நாட்டின் அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு அரசாங்கமும் ஏனைய அரசியல் கட்சிகளும் செயற்பட வேண்டும்.

அத்தோடு வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் காணப்படும் சகல இனங்களினதும் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் துரித நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்தது.

இதற்கமைய யுத்தத்தின் பின்னர் நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை வாழ் அனைத்து இன மக்களையும் சாரும் .

வடக்கு -கிழக்கு பிரதேசங்களில் சுற்றுலாத் துறைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் கூடுதலான அந்நியநாட்டு செலாவணியை இலங்கைக்கு பெற்றுக்கொள்ள முடியுமெனவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை தெளிவுபடுத்துகையிலேயே ஹெல உறுமயவின் தவைரும் பாராளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் கூறுகையில்,

முப்பதாண்டு காலமாக இலங்கையில் காணப்பட்ட உள் நாட்டு யுத்தத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் காணப்பட்ட இலங்கையின் சிறப்புரிமைகளை கூறும் வரலாற்றுப் படைப்புகள் யாவும் அழிந்து போயும் சேதமாக்கப்பட்டும் உள்ளன.

இவற்றை சீர் செய்து பாதுகாக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக ஹெல உறுமய அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றது.

கருத்து முரண்பாடுகளால் கடந்த காலங்களில் தமிழ்-சிங்கள மக்களிடையே காணப்பட்ட மோதல்கள் இல்லாமல் போய் தற்போது இரு இனங்களுக்கும் இடையில் சமாதானம் பிறந்து ஒற்றுமை வளர்ந்து கொண்டு வருகின் றது.

இதனை சீர்குலைக்காது சகல தரப்பினரும் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

மேலும் கூடுதலான வெளிநாட்டவர்கள் தற்போது இலங்கையின் வடக்கு -கிழக்கு பிரதேசங்களுக்கு சுற்றுலா செல்கின்றனர். எனவே இப்பகுதிகளில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண் டும் எனக் கூறினார். (2-6)

## கைத்தொழில் துறையினருக்கு வெளிநாடுகளில் பயிற்சி

### தொழில்துறை அமைச்சர் தெரிவிப்பு

கைத்தொழில் துறையைச் சார்ந்தவர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்கவும் அமைச்சினூடாக பத்தாயிரம் தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் திட்டமிட்டிருப்பதாக கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

கைத்தொழில் துறையை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதென வும் அதனடிப்படையில் முதற்கட்டமாக வெளி நாட்டு முதலீட்டாளர்களை அழைத்து வந்து உள் நாட்டு முதலீட்டை ஊக்குவிக்கவும் உள் நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கான வெளி நாட்டுச் சந்தை வாய்ப்பை அதிகரிக்கச் செய்யவும் உத்தேசித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் தரமிக்க உற்பத்திகளை எமது நாட்டில் உற்பத்தி செய்ய முடியுமென்றும் வெளிநாடுகளில் இதனூடாக இலங்கையின் உற்பத்திக்கு நல்ல கேள்வி ஏற்பட வாய்ப்பேற்படும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (2-6)

## உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

(கொழும்பு)

ஜனாதிபதியினால் பரிந்துரை செய்யப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பங்கள் தொடர்பில், உண்மையைக் கண்டறிந்து புனர்வாழ்வு அளிப்பது குறித்து இந்த ஆணைக் குழு ஆராய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்காக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆணைக் குழுவில் ஏழு பேர் அங்கம் வகிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மூன்று பக்கங்களைக் கொண்ட ஆணைக் குழு தொடர்பான யோசனைத் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

நோர்வேயினால் மத்தியஸ்தம் வகித்த யுத்த நிறுத்த உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டமை தொடர்பிலும் 2002 ஆம் ஆண்டு முதல் கடந்த வருடம் மே மாதம் 19 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலும் இந்த ஆணைக்குழு விசாரணை நடாத்த உள்ளது.

இந்த நிலைமைகளுடன் தொடர்புடைய தனிப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பிலும் அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

விசாரணை ஆணைக்குழு சுயாதீனமான முறையில் செயற்பட உள்ளதாகவும் சட்ட மா அதிபர் பிரதான சட்ட ஆலோசகராக செயற்படுவார் என்வும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஐ.ஆர்.ஏ கெரில்லாக்களின் நடவடிக்கைகள் தொடர்பில் பிரித்தானிய அரசாங்கம் நடத்திய விசாரணைகளுக்கு நிகரான விசாரணைகள் நடத்தப்படும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (2-6)

## முக்கிய பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைமைப் பொறுப்புகள் இம்முறை எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்படவில்லை

(கொழும்பு)

முக்கியமான பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களின் தலைமைப் பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கணக்காய்வு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்பான மிக முக்கியமான இரண்டு பாராளுமன்ற தெரிவுக் குழுக்களின் தலைமைப் பொறுப்பு இம்முறை எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்படவில்லை என்றும் பொதுக் கணக்குகள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழு (பாக்) மற்றும் பொது முயற்சியான்மை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆகியவற்றின் தலைமைப் பொறுப்புக்கள் இம் முறை அரசாங்கத் தரப்பினருக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறித்த இரண்டு தெரிவுக்குழுக்களின் மூலம் அரசாங்கத்தின் பல்வேறு ஊழல் மோசடிகளை வெளிப்படுத்த முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த பாராளுமன்றின் பாக் தெரிவுக் குழு தலைவராக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கடமையாற்றியதாகவும் பெறுமதி சேர் வரி தொடர்பில் இடம்பெற்ற மில்லியன் கணக்கான மோசடிகள் வெளிக்கொணரப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுமக்களின் பணம் தொடர்பில் கண்காணிப்பு நடத்தும் சந்தர்ப்பத்தை இம்முறை அரசாங்கம் எதிர்கட்சிகளுக்கு வழங்காது என எதிர்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (2-6)

## புதையல் தோண்டிய பொலிஸார் கைது

### திருகோணமலையில் சம்பவம்

(கொழும்பு)

திருகோணமலை வில்கம் விகாரையில் புதையல் தோண்டிய மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மற்றும் கந்தளாய் பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர்.

உப்புவெளி பொலிஸாரினால் குறித்த அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உதவி வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (2-6)

## சட்டவிரோதமாக அவுஸ்.செல்லமுயன்ற மேலும் ஒரு படகு கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமான முறையில் செல்ல முயன்ற வேளை அந்நாட்டின் வடமேற்கு கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த அகதிகளுடனான படகு ஒன்றினை கரையோர காவற்படை கைப்பற்றியுள்ளது. இந்தக் கப்பலில் 48 பேர் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட படகில் இலங்கையைச் சேர்ந்த அகதிகளும் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இவ் அகதிகளை கிறிமஸ்தீவுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-9)

## தம் நாட்டிற்கு விஜயம் செய்யுமாறு பிரிட்டன் பிரதமர் ரணிலுக்கு அழைப்பு

(கொழும்பு)

தமது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு பிரிட்டனின் புதிய பிரதமர் டேவிட் கெமருன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

டேவிட் கெமருன் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டமை குறித்து ரணில் விக்ரமசிங்க டில்லியிலிருந்து வாழ்த்து தெரிவித்த போது இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

டேவிட் கெமருன் ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் நண்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த அழைப்பினை ஏற்றுக் கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்பது குறித்து ரணில் விக்ரமசிங்க இன்னமும் தீர்மானிக்க வில்லை என தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## சரத்பொன்சேகாவை ஐ.தே.க.வில் இணைத்துக்கொள்ளத் திட்டம்

(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைத்துக் கொள்ளும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாகக் தெரிவிக்கப்படுகிது.

உயர் பதவி ஒன்றை வழங்கி பொன்சேகாவை கட்சியில் இணைத்துக்கொள்ள சிரேஸ்ட உறுப்பினர்கள் பலர் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.


இந்த யோசனைத் திட்டம் ஏற்கனவே அவரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதே வேளை பொன்சேகாவை இணைத்துக்கொள்வதன் மூலம் மறுசீரமைப்பு நடவடிக்கைகளினால் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சர்ச்சை மேலும் உக்கிரமடையக்கூடும் என அரசியல் அரசியல் அவதானிகள்சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர ஐக்கிய தேசியக் கட்சியில் இணையத் தீர்மானித்துள்ளதாகவும் தற்போது வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள அவர் நாடு திரும்பியதன் பின்னர் இணைந்து கொள்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (2-6)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# பிறப்புரிமைப் பொறியியலும் ஒளிரக்கூடிய பச்சைப்புரதமும்

## Genetic Engineering and Green Fluorocent Protein





உயிரியல் காரணிகள் காவிகளின் உதவியுடனோ அல்லது வேறு வழிகளின் ஊடாகவோ ஓர் அங்கியினுள் உட்புகுத்தப்படு கிறது.இதற்காக அவை DNA யை வெட்டும் நொதியத்துடனும் (Restriction Enzyme) பின்பு DNA யை ஒட்டும் நொதியத்துடனும் (DNA ligase) சேர்க்கப்படுகின்றது. இப் பொறி முறையானது பிறப்புரிமைப் பொறியியல் (Genetic Engineering) எனும் செயற்பாட்டி னால் பிறப்புரிமைப் பொறியியலாளர் ஒரு வரினால் வழமையாக நிறைவேற்றப் படும். இவ்வாறு பரம்பரை அலகை /அலகுகளை உட்புகுத்தும்போது அப் பரம்பரை அலகு / அலகுகள் உட்புகுந்து விட்டனவா என அறிய வேண்டிய தேவை உள்ளது. வழமை யாக நாங்கள் ஏதாவது மாற்றம் செய்யும் போது மாற்றத்திற்காக நாங்கள் பொருத்தும் அமைப்பை வெற்றுக்கண்ணால் பார்க்கக் கூடியதாக உள்ளது.

ஆனால் DNA யை பொறுத்த மட்டில் இது ஒரு வெற்றுக் கண்ணால் பார்க்க முடி யாத அமைப்பாகும்.ஆகையால் வழமை யான பிறப்புரிமைப் பொறியியலாளர்கள் DNA யை உட்செலுத்தும் போது அதனுடன் சேர்த்து ஓர் அடையாளப்படுத்தும் பரம்பரை அலகையும் (Marker gene) அல்லது அவ் வாறு பிறப்புரிமைப் பொறியியலில் மாற் றம் செய்யப்பட்ட அங்கிக்கென ஒரு சிறப்பியல்பையும் கொடுக்கவேண்டும். உதாரணமாக வழமை யாக நுண்ணுயிர்க கொல்லியை (Antibi-otic) பிரிகை அடை யச் செய்யக்கூடிய நொதியமோ அல்லது அதற்கு நிகரான ஒரு பதார்த்தமோ பயன்படுத்தப்படுவ துண்டு.






இவ்வாறான மாற்றங்கள் சில வேளை களில் மனிதனுக்கு தீங்கு பயப்பனவாக மாறலாம் என்பதற்காக ஒளிரக் கூடிய பச்சைப் புரதம்(Green Flurorcent Protein) போன்ற வை பாவிக்கப்படுவதுண்டு. ஒளிரக் கூடிய பச்சைப் புரதமானது 238 அமினோ அமிலங்களைக் கொண்டது. இது முதன் முதலில் (Jelly Fish(Aeqorea victoria) இல் இருந்து பெறப்பட்டது. இப் புரதம் நீல ஒளியில் (UV) பச்சையாக ஒளிரும். ஒளிரக் கூடிய பச்சைப் புரதத்தை முழுமையாக எமக்கு தேவையான பரம்பரை அலகுடன் இணைப்ப தன் மூலம் எமது பரம்பரை அலகு செலுத்த வேண்டிய அங்கிக்குள் உட் சென்றுவிட்டதா என்று உயிருள்ள உயிரியில் வைத்தே அவதானிக்கலாம். தற்போது ஒளிரக் கூடிய பச்சைப்புரதம் இரு புரதங்களுக்கு இடையே யான தாக்கங்களை (Protein-Protein inter-action) கண்டறியவும் பயன்படுகின்றது.

எமது உடலிலும் சரி வேறு அங்கியின் உடலிலும் சரி பல செயற்பாடுகள் நடைபெறு வதற்கு (உதாரணம்:- தசைச் சுருக்கம்) புரதங் களுக்கு இடையிலான இடைத்தாக்கம் முக்கி யமாகின்றது. இப் புரதம்- புரதம் இடைத் தாக்கத்தில் குறைந்தது இரண்டு புரதங்கள் அல்லது அவற்றின் பகுதிகள் பங்கெடுக்கும். இந்த இரண்டு புரதங்களும் இரண்டு பகுதி களாக பிரிக்கப்பட்ட ஓர் அடையாளப்படுத்தும் புரதத்துடன் (இது எதேட்சையாக பிரிக்கக் கூடிய நிகழ்வல்ல. ஒளிரக் கூடிய பச்சைப் புரதம் போன்ற ஒரு சில புரதங்களுக்கு செல் லுபடியாகும்).




ஒவ்வொன்றாக இணைக்கப்படும். வழ மையாக புரதம்- புரதம் இடைத்தாக்கம் நிகழும் போது ஒவ்வொரு புரதத்துடனும் பொருத்தப்பட்ட ஒளிரக் கூடிய பச்சைப் புரதத்தின் பாதிகள் கலத்தின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட இடைத் தாக்கத்தின் மூலம் அருகருகே கொண்டு வரப்படும். இவ்வாறு அருகருகே கொண்டு வரப்பட்ட ஒளிரக் கூடிய பச்சைப் புரதத்தின் பகுதிகள் நீல ஒளியின் கீழ் ஒளிரும். இவ் ஒளிர்வு நிகழ்வானது. அவை இணைக்கப் பட்ட இரு புரதங்களுக்கு இடையில் ஒரு இடைத் தாக்கம் நடைபெறுவதை அவதா னிக்க (உயிரியினுள்) பயன்படுத்தப்படுகின் றது. இவ்வாறானதொரு செயற்பாடு உயிருள்ள உயிரியினுள் (in vivo) நடை பெறும் புரதம்-புரதம் இடைத்தாக்கத்தை அவதானிப்பதற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது என்பதில் ஐயமில்லை.




கலாநிதி ப.செவ்வேள்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தாவரவியற்றுறை.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 21

Buck minster fullerene எனும் பொருளைக் கண்டு பிடித்தமைக்காக வேதியியலுக்கான நோபல் பரிசு மூன்று விஞ்ஞானிகளுக்கு 1996 இல் வழங்கப்பட்டது. இம் மூலக்கூறில் எத்தனை காபன் அணுக்கள் உள்ளன.

விடைகளை 25-05-2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:
Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனன் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

புதிர் 19க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி
திரு.கே.ராஜகோபால்
அடைக்கலம்தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

புதிர் 20 இற்கான விடை : Arapaima gigas

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 21

சரியான விடை :..............................................
முழுப்பெயர் :..............................................
முகவரி :..............................................
:..............................................
கையொப்பம் :..............................................

# COLOMBO COMMERCE RESOURCE CENTRE
# கொழும்பு வணிகவள நிலையம்

## முன்னோடிப் பரீட்சை க.பொ.த.உயர் தரம்-2010

### புவியியல் III (மானிடப்புவியியல்)

நேரம் :-1 மணி

பகுதி - I

♦ எல்லா வினாக்களுக்கும் சரியான இலக்கத்தை அடைப்பிற்குள் எழுதுக.

(1) உலகப் பல்கலைக்கழகங்களில் புவியியல் ஒரு கற்கை நெறியாக முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட நூற்றாண்டு
1) 15 ஆம் நூற்றாண்டில் 2) 17 ஆம் நூற்றாண்டில்
3) 5 ஆம் நூற்றாண்டில் 4) 19 ஆம் நூற்றாண்டில் (..........)

(2) மானிடப் புவியியல் எனப்படுவது
1) மனித நடவடிக்கைகளின் இடம்சார் கோலம்
2) மனிதனின் நடத்தை பற்றியது
3) சூழலின் தன்மை பற்றி ஆராய்வது
4) புவியின் தன்மை பற்றி ஆராய்வது (..........)

(3) ஐரோப்பிய நகர வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணியாக அமைவது
1) விஞ்ஞான வளர்ச்சி 2) *நாடுகாண் பயணம்
3) கைத்தொழிலாக்கம் 4) உலகப்போர்கள் (..........)

(4) மிரிஸ்ஸ, தங்காலை, பேருவலை போன்ற பகுதிகளில் வளர்ச்சியடைந்துள்ள குடியிருப்பு
1) நிர்வாகக் குடியிருப்பு
2) மீன்பிடிக் குடியிருப்பு
3) துறைமுகக் குடியிருப்பு
4) வரலாற்றுக் குடியிருப்பு (..........)

(5) உலக சனத்தொகை துரிதமாக வளர்ச்சியடையத் தொடங்கியண காலப்பகுதி
1) 17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்
2) 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்
3) 5ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்
4) 10 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (..........)

(6) ஒரு குடித்தொகையில் முதியோரின் சதவீதம் அதிகரிப்பது
1) பிறப்புவீதமும் அதிகரித்து, இறப்பு வீதமும் அதிகரிக்கின்றபோது
2) பிறப்பு வீதமும் அதிகரித்து, தேறிய பெயர்வு வீதம் அதிகரிக்கின்றபோது
3) இறப்பு வீதம் குறைந்து, தேறிய பெயர்வு வீதம் குறையும் போது
4) பிறப்பு வீதம் குறைந்து, இறப்பு வீதமும் குறையும் போது (..........)

(7) உலக சனத்தொகை வளர்ச்சி வேகம் 1 நிமிடத்திற்கு எத்தனை பேர்
1) 30 பேர் 2) 150 பேர்
3) 200 பேர் 4) 50 பேர் (..........)


(8) 2050 களில் உலக சனத்தொகை பருமன் அடிப்படையில் முதல் நான்கு நாடுகளாக எதிர்வு கூறப்பட்டுள்ள நாடுகள்.
1) இந்தியா, சீனா, ஐக்கிய அமெரிக்கா, நைஜீரியா
2) சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, தென்ஆபிரிக்கா
3) சீனா, ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, சிம்பாவே
4) நைஜீரியா, இந்தியா, சீனா, ஐக்கிய அமெரிக்கா (..........)

(9) ஆசியாவில் மில்லியன் நகரங்களை அதிகம் கொண்டுள்ள நாடுகளில் முதல் மூன்று நாடுகளை சரியாகக் கொண்டுள்ள விடை.
1) தென்கொரியா, இந்தோனீசியா, பங்காளதேஷ்
2) இந்தியா, சீனா, பாகிஸ்தான்
3) சீனா, இந்தியா, பாகிஸ்தான்
4) பங்காளதேஷ், பாகிஸ்தான், மியான்மார் (..........)

(10) ஐக்கிய அமெரிக்காவில் மேற்குப் பண்ணைக் குடியிருப்புக்களும் ஸ்கொட்லாந்தின் உயர்நில கால்நடை வளர்ப்புக் குடியிருப்புக்களும் எவ்வகை குடியிருப்புக்குள் அடங்கும்.
1) மேட்டுநிலக்குடியிருப்பு 2) சிதறிய குடியிருப்பு
3) குழுமியக் குடியிருப்பு 4) நாடாக் குடியிருப்பு (..........)

(11) மத்திய தரைப் பயிர்ச்செய்கை நடைபெறும் நாடுகளைச் சரியாகக் கொண்டுள்ள விடை
1) ஐக்கிய அமெரிக்கா, சிலி, இந்தியா
2) சிலி, தென்ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா
3) கொங்கோ, பிறேசில், இந்தோனீசியா
4) பிலிப்பைன்ஸ், யப்பான், ரஷ்யா (..........)

(12) அருகில் உள்ள இந்தியப்படத்தில் நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தில் விளையும் பிரதான பயிர்



1) நெல் 2) கோதுமை
3) பருத்தி 4) கரும்பு (..........)

(13) உலகில் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைந்த நாடு
1) நோர்வே 2) சுவீடன் 3) ஸ்பெயின்
4) டென்மார்க் (..........)

(14) இலங்கையில் குடும்பத்திட்டமிடற் சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு.
1) 1960 2) 1958 3) 1963
4) 1953 (..........)

(15) விவசாயத்தின் ஆரம்பகாலம் எனக் கருதப்படும் காலம்
1) கி.மு 500 2) கி.மு 1000 3) கி.மு 8000
4) கி.மு 2000 (..........)

(16) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் H பிரிவில் புதிதாக விருத்தி செய்யப்பட்ட முதலாவது நகரம் எது?
1) கல்நாவ 2) எப்பாவல 3) கெக்கிராவ
4) மீ கொல்லாவ (..........)

(17) "டொக்கர் பாங்" கடலடித் தளமேடை அமைந்துள்ள மீன்பிடித் தளம் எது?
1) வடமேல் பசுபிக் 2) வடகீழ் பசுபிக்
3) வடகடல் 4) வடமேல் அத்திலாந்திக் (..........)

(18) கடதாசி உற்பத்திக் கைத்தொழிலை மிக முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார நடவடிக்கையாக கொண்டுள்ள இரு நாடுகளை சரியாகக் கொண்டுள்ள விடை
1) இந்தியாவும், மலேசியாவும்
2) ஜேர்மனியும், பின்லாந்தும்
3) கனடாவும், பிலிப்பைன்சும்
4) நோர்வேயும், சுவீடனும்

(19) கீழேயுள்ள ஐக்கிய அமெரிக்காப் படத்தில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள பகுதியில் காணப்படும் அயன வலயப் பயிர்




1) கோதுமை
2) நெல்
3) தேயிலை
4) இறப்பர் (..........)

(20) அம்பன் கங்கையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நீர்த்தேக்க திட்டம்.
1) விக்டோறியா 2) மாதுரு ஓயா 3) மொறககந்த
4) போவத்தன்ன (..........)

(21) செயற்கை இறப்பர் உற்பத்தியில் ஈடுபடும் நாடுகளைச் சரியாகக் கொண்டுள்ள விடை
1) மொசாம்பிக், இந்தோனேசியா, மலேசியா
2) ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா, செக் குடியரசு
3) இலங்கை, இந்தியா, மலேசியா
4) பிறேசில், கொங்கோ, ஐக்கிய அமெரிக்கா (..........)

(22) இலங்கையில் சிறு ஏற்றுமதி பயிர்களுக்கான அமையப் பெற்றுள்ள இடங்களை சரியாகக் கொண்டுள்ள விடை
1) கொழும்பு, புத்தளம்
2) அநுராதபுரம், பொலன்னறுவை
3) மாத்தளை, அம்பாந்தோட்டை
4) மொனராகலை, மாத்தளை

(23) மரமுந்திரிகை உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களை மட்டும் கொண்டுள்ள விடை
1) மன்னார், புத்தளம், அம்பாந்தோட்டை
2) களுத்துறை, காலி, மாத்தறை
3) கேகாலை, கண்டி, அநுராதபுரம்
4) இரத்தினபுரி, மொனராகலை, கம்பஹா (..........)

(24) கீழே தரப்பட்டுள்ள ஐக்கிய அமெரிக்காப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை யாது?



1) மத்திய தரைப்பயிர்ச் செய்கை
2) பருத்தி வேளாண்மை
3) சுயதேவை கலப்பு வேளாண்மை
4) வர்த்தக கலப்பு வேளாண்மை (..........)

(25) மத்திய ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, வடரஷ்யா பகுதிகளில் வாழும் ஆதிவாசிகளை சரியாகக் கொண்டுள்ள விடை
1) புஸ்மன்கள், பிக்மீஸ், பப்புவான்
2) பியூனான்கள், கேர்க்கீஸ், பெடோயின்
3) பிக்மீஸ்கள், அபோறிஜெனிஸ், லாப்பியர்
4) மசாய், புலானி, எஸ்கிமோவர் (..........)

(26) கனடாவில் பெற்றோலியம் காணப்படும் முக்கிய இடத்தைச் சரியாகக் கொண்டுள்ள விடை
1) பென்சில்வேனியா 2) அல்பேட்டா 3) ரெக்சாஸ்
4) கன்சாஸ் (..........)

(27) உலகில் மிக ஆழமான பெற்றோலியக் கிணறு காணப்படும் நாடு?
1) ரஷ்யா 2) ஐக்கிய அமெரிக்கா 3) வெனிசுவெலா
4) புரூணை (..........)

(28) ஐக்கிய அமெரிக்காவில் முக்கிய இரு கப்பல் கட்டும் இடங்கள்
1) லொஸ்ஏஞ்சல், நியுயோர்க்
2) நியுயோர்க், பொஸ்தன்
3) பொஸ்தன், வாஷிங்டன்
4) சான் பிரான்சிஸ்கோ, பிலடெல்பியா (..........)

(29) இலங்கையில் காகிதத் தொழிற்சாலை அமையப் பெற்றுள்ள இடமொன்று.
1) அம்பாறை 2) கந்தளாய் 3) எம்பிலிபிட்டி
4) அம்பாந்தோட்டை (..........)

(30) இலங்கையில் சீனி உற்பத்தித் தொழிற்சாலைகள் காணப்படும் இடங்களை சரியாகக் கொண்டுள்ள விடை
1) கந்தளாய், மட்டக்களப்பு, பாலாவி
2) செவனகல, பெல்வத்தை, ஹிங்குரான
3) ஒருவெல, பொரலஸ்கமுவ, கொக்கலை
4) எக்கலை, தங்கொட்டுவ, நாத்தாண்டியா

(31) சுயேஸ், பனாமா கால்வாய்கள் வெட்டப்பட்ட ஆண்டுகளை சரியாகக் கொண்டுள்ள விடை
1) 1748, 1910 2) 1767, 1925 3) 1648, 1836
4) 1969, 1914 (..........)

(32) அருகில் தரப்பட்டுள்ள இலக்கம் 1, 2, 3 4 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பேரேரிக் கரையோர பிரதேச இரும்புத் தாது வயல்களினை சரியாகக் கொண்டுள்ள விடை




1) மெசாபி, வேமிலியன், மெனோமி, கியூனா
2) வேமிலியன், மெசாபி, கியூனா, மெனோமி
3) மெனோமி, கியூனா, மெசாபி, வேமிலியன்
4) கியூனா, மெனோமி, வேமிலியன், மெசாபி (..........)

(33) "டொன்பாஸ்" இரும்புருக்குப் பிரதேசம் அமைந்திருப்பது.
1) உக்றேயின் 2) கஸகஸ்தான் 3) ரஷ்யா
4) உஸ்பெஸ்தான் (..........)

(34) இலங்கையின் பெருந்தெருக்களின் வகை எத்தனை?
1) 4 2) 3 3) 5
4) 2 (..........)

(35) "ஹத்தாச்சி" என்ற துரித புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இச்சேவை எவ்விரு நகரங்களுக்கிடையில் நடைபெறுகின்றது.
1) கொழும்பு → வவுனியா
2) கொழும்பு → கண்டி
3) கொழும்பு → காலி
4) கொழும்பு → அவிசாவளை (..........)

(36) "SAPTA" உடன்படிக்கை எவ்விரு நாடுகளுக்கிடையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
1) பாகிஸ்தான் – பங்காளதேஷ்
2) இந்தியா → பாகிஸ்தான்
3) இலங்கை – இந்தியா
4) பங்காளதேஷ் – மியான்மார் (..........)

(37) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மிகப் பெரிய அமைப்பாக கருதப்படுவது.
1) குழு 77 2) G. 11
3) குழு 20 4) சார்க் (..........)

(38) ஆசியான் அமைப்பின் பிரதான செயலகம் அமையப் பெற்றுள்ள நகரம்
1) கோலாலம்பூர் 2) ரங்கூன்
3) யக்கார்த்தா 4) மணிலா (..........)

(39) பின்வருவனவற்றுள் ஒபேக் (OPEC) அமைப்பில் அங்கத்துவம் பெறாத பெற்றோலிய உற்பத்தி நாடொன்று
1) ரஷ்யா 2) வெனிசுவெலா
3) லிபியா 4) இந்தோனீசியா (..........)


(40) G–5 நாடுகளின் அமைப்பில் அங்கத்துவம் கொண்டுள்ள நாடுகளைச் சரியாகக் கொண்டுள்ள விடை
1) ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி
2) யப்பான், அவுஸ்திரேலியா, கனடா, ஸ்பெயின், பிரான்ஸ்
3) சீனா, இந்தியா, பிறேசில், மெக்சிக்கோ, தென் ஆபிரிக்கா
4) இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ரஷ்யா (..........)

## பகுதி – II

நேரம் :– 2 மணி

♦ விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

1) இலங்கையின் பருமட்டான பிறப்பு வீதமும் பருமட்டான இறப்பு வீதமும் (1900 – 2000)




அ) வரிப்படத்தில் 1, 2, 3 எனக் காட்டப்பட்டுள்ள மூன்று கட்டங்களையும் பெயரிடுக. (03 புள்ளி)

ஆ) 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையின் குடித்தொகையின் பருமட்டான பிறப்பு வீதத்தின் உயர்மட்டத்திற்கு பொறுப்பாயமைந்த மூன்று காரணிகளை ஆராய்க. (06 புள்ளி)

இ) 1940களின் பிற்பகுதியில் இலங்கையின் பருமட்டான இறப்பு வீதம் வீழ்ச்சியடைந்ததினால் ஏற்பட்ட மூன்று சமூக பொருளாதார விளைவுகளை விவரிக்குக. (06 புள்ளி)

2) அ) இலங்கையில் பின்வரும் கனிய வளங்கள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக
(a) இல்மனைட் கனிய மணற் படிவுள்ள இடம்
(b) பொஸ்பேற் உற்பத்திக்கு முக்கியமான அபதைற் காணப்படும் இடம்
(c) காரீயச் சுரங்கம் காணப்படும் இடமொன்று (06 புள்ளி)

ஆ) இலங்கையில் கனியம் சார்ந்த பெரும்பாலான கைத்தொழில்கள் வளர்ச்சியடையாமைக்கான காரணங்களை விளக்குக. (06 புள்ளி)

இ) அகழ்வுக் கைத்தொழிலுடன் தொடர்புடைய பிரச்சினைகளையும், தீர்வுகளையும் ஆராய்க. (06 புள்ளி)

3) அ) தரப்பட்டுள்ள உலகப்படத்தில் கடல் சார்ந்த மீன்பிடித் தொழிலுக்கு முக்கியமான மூன்று கடல்சார் மீன்பிடித் தளங்களைக் குறித்துப் பெயரிடுக. (03 புள்ளி)

ஆ) அத்திலாந்திக், பசுபிக் ஆகிய பிரதேசங்களிலிருந்து ஒவ்வொரு மீன்பிடித்தளத்தினைத் தெரிந்து மீன்பிடித் தொழில் விருத்தி பெற்றமைக்கான காரணிகளை ஆராய்க. (06 புள்ளி)

இ) இலங்கையில் மீன்பிடிக்கைத்தொழிலை ஊக்குவிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை விபரிக்குக. (06 புள்ளி)

4) அ) தரப்பட்டுள்ள உலகப்படத்தில் மோட்டார் வாகன உற்பத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று நாடுகளை குறித்துப் பெயரிடுவதுடன் அந்நாடுகள் ஒவ்வொன்றிலுமுள்ள முக்கிய மோட்டார்வாகன உற்பத்தியிடங்களையும் குறித்துப் பெயரிடுக. (06 புள்ளி)

ஆ) மோட்டார்வாகன உற்பத்தியில் அண்மைக் காலங்களில் இடம்பெற்று வரும் மாற்றங்களை ஆராய்க. (09 புள்ளி)

5) அ) உலகில் கோதுமை உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்ற முக்கிய பிரதேசங்கள் மூன்றினை உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக (03 புள்ளி)

ஆ) கோதுமை உற்பத்தி, பயிர்ச் செய்கை தொடர்பான முக்கிய இயல்புகளை விளக்குக. (06 புள்ளி)

இ) சர்வதேச வர்த்தகத்தில் நெல்லைவிட கோதுமை முக்கியத்துவம் பெற்றமைக்கான காரணங்களை விபரிக்குக. (06 புள்ளி)

6) அ) இலங்கையில் பாற்பண்ணைத் தொழில் நடைபெறுகின்ற மூன்று இடங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளி)

ஆ) இலங்கையில் பால் உற்பத்தியாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளி)

இ) இலங்கையில் பால் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு என்பவற்றை ஊக்குவிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளி)

7) அ)
- நிலக்கரி உற்பத்தி செய்யும் நாடொன்று
- கனிய எண்ணெய் உற்பத்தி செய்யும் தென்கிழக்காசியநாடொன்று
- இயற்கை வாயு உற்பத்தியில் முக்கியத்தவம் வாய்ந்த வடஅமெரிக்க நாடொன்று (03 புள்ளி)

ஆ) உலக வலு உற்பத்தியில் 80% ற்கு மேல் வடஅமெரிக்கா கண்டமே பயன்படுத்துகின்றது. ஆபிரிக்கா போன்ற நாடுகள் 2 வீதத்தையே பயன்படுத்து கின்றன. இந்நிலைக்கான காரணங்களை விளக்குக. (06 புள்ளி)

இ) எதிர்காலத்தில் எழக்கூடிய உலக சக்தி தேவையை நிறைவு செய்வதற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளி)

8) அ) அண்மைக் காலங்களில் சுற்றுலாத்துறை துரிதமாக வளர்ச்சி கண்டு வரும் ஒரு துறையாகக் காணப்படுகின்றது. பல்வேறு மக்களும் சுற்றுலா செல்வதற கான காரணங்களில் மூன்றினை எழுதுக. (03 புள்ளி)

ஆ) சுற்றுலாத்துறையானது துரித வளர்ச்சியடைந்து வருகின்றமைக்கான காரணிகள் குறித்து ஆராய்க. (06 புள்ளி)

இ) இலங்கையில் சுற்றுலாத்துறையை வளர்த்தெடுக்கும் போது ஏற்படும் சாதக, பாதக விளைவுகளை ஆராய்க. (06 புள்ளி)

# களம் பல கண்ட யாழ் கோட்டை

33

## ஈழயுத்தம் -2

ஏறிய வேகத்தில் அதிலிருந்து குதித்த இலங்கை இராணுவ வீரர்கள் சிலர் பண்ணை வீதியை அடுத்து மேற்குப்புற அகழிக்கு வெளியில் அகழி மதிலோடு இருந்த தாழ்காவலரணில் (சின்னக் கோட்டையில்) புகுந்து கொண்டனர். புகுந்து தம்மை மறைத்துக்




கொண்டு சென்றி நிலை எடுத்துக் கொண்டனர். சின்னக்கோட்டைக்குள் புகுந்தவர்கள் மறைவெடுத்திருந்ததால் புலிகளால் தாக்க முடியாது போனது.

யாழ் கோட்டையை அடைய எடுத்த முயற்சியில் 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக இலங்கை அரசு கூறியது. 106 பேர் கடுங்காயமடைந்ததாகவும் குறிப்பிட்டது. இந்த எண்ணிக்கையை விட மிக அதிகமாகவே பலியாகியோர் தொகை இருக்க முடியும்.


யாழ்ப்பாணக் கோட்டையின் மேற்குப் பக்கமாக அகழியை அடுத்து அமைந்திருந்த சின்னக்கோட்டைக்குள் புகுந்து கொண்ட இராணுவத்தினர் அங்கிருந்து நிலையெடுத்து பண்ணைச்சந்தியிலிருந்து புலிகளின் காவலரண்களைக் கைப்பற்ற முயன்றனர். பண்ணைச்சந்தியில் திறந்த வெளியில் போராளிகளின் பலமான அரண் ஒன்றிருந்தது. தண்டவாளங்கள் மண் மூடைகள் ரயர்கள், கொண்டு அமைந்த பலமான அரணாக அது விளங்கியது. இதனையும் தொலைத்தொடர்பு நிலையத்தையும் இணைக்கும் வகையில் எலிவளை போன்ற சுருங்கைகள் அமைந்திருந்தன.

தனித்திருந்த பண்ணைச்சந்திக் காவலரணை விமானங்கள் தாக்கின. ஆர்பிஜி மூலம் றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது. கோட்டை மதிலின் மீதிருந்தும் பீரங்கித் தாக்குதல்கள் நிகழ்ந்தன. இவற்றிற்கு எதிராக அக்காவலரணால் தாக்குப்பிடிக்க முடியாது போனது. தண்டவாளங்கள் உடைந்து போயின. மண்மூடைகள் சிதறின. காய மடைந்த புலிகளைப் பங்கர்களுடாக அப்புறப்படுத்தி விட்டு அவ்விடத்தில் புதிய புலிகள் நிலையெடுத்துத் தாக்கினர். எனினும் பண்ணைச் சந்திக் காவலரண் முற்றாகத் தகர்ந்துபோனதும் புலிகள் அதனைக் கைவிட்டு நகர நேர்ந்தது.

தொலைத்தொடர்புக் காவலரணிலிருந்து பண்ணைச்சந்திக் காவலரணிற்கு உதவிகள் செல்வதைத் தடுப்பதற்காக மூன்று போர்



விமானங்கள் தொலைத்தொடர்பு நிலையப் பகுதியில் மாறிமாறிக் குண்டுகளை வீசத் தொடங்கின. அதேவேளை சின்னக் கோட்டைக்குள் அரண் எடுத்திருந்த இராணுவத்தினரில் ஒருபகுதியினர் மெதுவாகப் பண்ணைச்சந்திக் காவலரணை நோக்கி நகர்ந்த போது மண்மூடைகளற்ற, பாதுகாப்பற்ற பங்கருக்குள் நின்றிருந்த புலிகளின் துப்பாக்கிகள் முழங்கின. முன்னேறிய இராணு



வத்தினர் குண்டடிபட்டுக் சரிய ஏனையோர் பின்வாங்கிச் சின்னக்கோட்டைக்குள் புகுந்து கொண்டனர்.

பண்ணைக் கரையில் புலிகளின் துப்பாக்கிச்சன்ன மழையிடையே புகுந்து தப்பி வந்து கரையேறிய இராணுவத்தினர் சிலர் பொலிஸ் நிலையக் கட்டடங்களைக் கைப்பற்றும் நோக்குடன் கடற்கரை வீதியில் நகர்ந்தனர். பொலிஸ் நிலையக் காவலரணிலிருந்தும் விளையாட்டரங்குக் காவலரணிலிருந்தும் முழங்கிய துப்பாக்கி வேட்டுக்களுக்கு அவர்கள் பலியாகி நிலத்தில் சரிந்தனர்.

எனினும் மண்டைதீவிலிருந்தும் கடலிலிருந்தும் கோட்டையிலிருந்தும் ஏவப்பட்ட குண்டுகளால் பொலிஸ் நிலையக் காவலரண்கள் உடைந்தன. உடைந்து குவிந்த அந்தக் காவலரண்களையே காப்பரண்களாக்கி புலிகள் போரிட்டனர்.

**அன்று பகல் 11-15 மணி**

மண்டைதீவிலிருந்து பண்ணைக் கரை கரையில் இறங்க முயன்ற இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் ஏற்படுத்திய ஆற்றாமை விமானப் படைகளின் மூர்க்கமான தாக்குதலாக மாறியது. மூன்று போர் விமானங்கள் யாழ்ப்பாண நகரைச் சுற்றி வந்து புலிகள் நிலைகள் மீது குண்டு வீசு வதாக எங்கும் வீசின. ஒரு போர் விமானம் பண்ணைச் சந்திக் காவலரணைத் தகர்த் தெறியும் நோக்குடன் சில தடவைகள் வேகமாகக் குத்தெனச் சரிந்து சாய்வாக எழுந்து காற்றில் சரிந்தபடி வீர்ரென இறங்கி ஏறுகின்ற அந் தக் கணப்பொழுதைக் கணித்த ஒரு புலிகளின் விமான எதிர்ப்புத் துப்பாக்கி முழங்கிய சரமாரியான குண்டுகள் விமானத்தைத் துளையிட்டன. பதிந்து தாக்கி விட்டு உறுமியபடி எழுந்த அந்தப் போர் விமானம் தடுமாறித் தள்ளாடி பண்ணைக் கடலுக்குள் குப்புற விழுந்தது. பண்ணை வீதிக்குக் கிழக்குப் பகுதியில் கோட்டைக்கு நேரே முன்னால் சுமார் 1000 யார் தொலைவில் அது விழுந்து சிதறியது. கோட்டை யுத்தத்தில் இலங்கை இராணுவம் சந்தித்த பாரிய இழப்பு இதுவாகும்.

புலிகளின் பொலிஸ் நிலையக்



காவலரனும் பண்ணைச்சந்திக் காவலரணும் சரிந்து சிதறிப் போயின. அதேவேளை பண்ணைக் கடலில் சுட்டு வீழ்த்தப்பட்ட போர்

**செங்கை ஆழியான்**

விமானம் ஏற்படுத்திய இரைச்சல் சுற்றாடலை ஒரு சில கணங்கள் அமைதியில் ஆழ்த்தியது. அந்த நேரம் சின்னக் கோட்டைக்குள் புகுந்திருந்த இராணுவத்தினர் அகழியில் இறங்கி நடந்து கடந்து கோட்டையின் மேற்குப்பக்க மதிலினடிவாரச் சுரியில் ஒதுங்கி நின்றனர். அதேவேளை கோட்டை மதிலினுச்சியிலிருந்து கயிற்றின் மூலம் ஏணி ஒன்று இறக்கப்பட்டது. அதில் ஏறி இராணுவத்தினர் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர்.

கோட்டைக்குள் புகுந்த இராணுவத்தினர் முற்றுகை முறியடிப்பு எனக் கூறியதால் கோட்டைக்குள் இருந்தவர்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர். இலங்கை அரசு வானொலியில் அறிவித்தவாறு யாழ் நகரின் ஸ்ரான்லி வீதி வரை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் இருக் கின்றது என நம்பினார்கள்.(தொடரும்)

# புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் பத்தாயிரம் பேருக்கு புனர்வாழ்வு

## டி.யூ.குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் பத்தாயிரம் பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் என சிறைச்சாலைகள் அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது, விடுதலைப் புலிகளின் ஆயிரம் சிரேஸ்ட உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் விரைவில் விடுதலை செய்யப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக முன்னாள் பெண் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி விடுதலை அளிக்கப்படவுள்ளது.

மேலும் கைது செய்யப்பட்ட 11 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களில் இரண்டாயிரம் பேர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(2-6)

## சோமாலிய கொள்ளையரால் கடத்தப்பட்ட

# இலங்கை கப்பல் பணியாளர்களை விடுவிக்க

## 5 இலட்சம் அமெரிக்க டொலர் கப்பம்

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட பர்முடா கப்பலில் இருந்த இலங்கை கப்பல் பணியாளர்களை விடுவிக்க 5 இலட்சம் அமெரிக்கா டொலர்கள் கப்பமாக வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கையைச் சேர்ந்த கப்பல் பணியாளர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஓமான் கடற்பரப்பில் வைத்து சோமாலியாக் கடற்கொள்ளையர்களால் கப்பலுடன் கடத்தப்பட்டனர். இவர்களை விடுவிப்பதற்காக கப்பல் நிறுவனம் கடந்த சனிக்கிழமை கப்பப் பணத்தை வழங்கியுள்ளது.

சோமாலியக் கடற்கொளையர்களால் இரண்டு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 இலங்கை கப்பல் பணியாளர்கள் விடுவிக்கப்பட்ட நிலையில் சோமாலிய கடற்பரப்பில் இருந்து ஓமான் சென்றுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களை அங்குள்ள இலங்கை தூதரகம் பொறுப்பேற்று இலங்கை அனுப்பி வைக் கும் எனவும் அமைச்சு கூறியுள்ளது.

இவர்கள் எகிப்தின் போத்தனா துறை முகத்தில் இருந்து ஈரானின் பஷியர் துறை முகத்தை நோக்கிச் சென்றுக்கொண்டிருந்த போது ஓமான் கடற்பரப்பில் வைத்து சோமாலிய கடற்கொள்ளையர்களால் கப்பலுடன் கடத்திச் செல்லப்பட்டனர். (2-6)

# விமான விபத்தில் 8 வயது சிறுவன் மாத்திரம் உயிர் தப்பிய அதிசயம்

திரிப்போலி விமான நிலையத்தில் தரை யிறங்கும்போது திடீரென நொறுங்கி விழுந்து 105 பேரை பலிகொண்ட லிபிய விமான விபத்தில் தெய்வாதீனமாக 8 வயதுச் சிறு வன் மட்டும் உயிர் தப்பியதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சிறுவன் அருகிலுள்ள மருத்துவ மனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு அவ னுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருவதாக விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

தென்னாபிரிக்காவின் ஜோகன்ன ஸ்பேர்க் விமான நிலையத்தில் இருந்து உள் ளூர் நேரப்படி நேற்று முன்தினம் காலை 6.00 மணி யளவில் 94 பயணிகள் மற்றும் 11 சிப்பந்திகளுடன் இந்த விமானம் லிபி யாவின் திரிப்போலி நகருக்கு வந்து தரை யிறங்கியபோதே விபத்து ஏற்பட்டுள்ளது.

விமான விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை என லிபிய அதிகாரிகள் தெரிவித்தனர். (2-6)

# வீட்டுக்காவலை எதிர்த்து ஆங்சான் சூகி மேல்முறையீடு

வீட்டுக்காவலை எதிர்த்து மியன்மார் நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் ஆங்சான் சூகி நீதிமன்றத்தில் மீண்டும் மேல்முறையீடு செய் துள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளில் சுமார் 14 ஆண்டுகள் வீட்டுக்காவலில் ஆங்சான் சூகி இருந்துள்ளார். இந்த நிலையில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவரது வீட்டுக்காவல் மேலும் 18 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது.


ஏரியையொட்டி உள்ள அவரது வீட்டுக்கு அமெரிக்காவைச் சேர்ந்தவர் நீந்திச் சென்றது கண்டுபிடிக்கப்பட்டு ஆங்சான் சூகி மீது குற்றம் சுமத்தப்பட்டது. இதையொட்டியே அவ ருக்கு வீட் டுக்காவல் 18 மாதங்களுக்கு நீட்டி க் கப்பட்டது.

இதை எதிர்த்து சூகி உச்ச நீதிமன் றத்தில் 2முறை மேல் முறையீடு செய்தார். ஆனால் 2 முறையும் உச்ச நீதிமன்றம் அவரது மனுவை நிராகரித்தது. இந்த நிலையில் 3ஆவது முறையாக வீட்டுக்காவலில் இரு ந்து தன்னை விடுவிக் குமாறு ஆங்சான் சூகி உச்ச நீதி மன்றத்தில் முறையீடு செய்துள் ளார். இது குறித்து அவரது வழக்கறிஞர் நியான் வின் கூறியதாவது ; கடந்த திங்கட் கிழமை சூகியின் மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அவரது மனுவை ஏற்க நீதி மன் றம் ஒப்புக்கொண்டுள்ளது. இன்னும் 2 வாரங்களில் மனுவின் மீதான முடிவு தெரி யும் என்றார் அவர்.

1990 ஆம் ஆண்டு மியன்மாரில் நடை பெற்ற தேர்தலில் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி பெருவாரியான வெற்றிபெற்றது. ஆனால் தேர்தலுக்கு முன்னதாகவே அவர் வீட் டுக்காவலில் வைக்கப்பட்டார். தற்போது அவர் வீட்டுக்காவலிலேயே இருந்துவருகிறார். (2-6)



இங்கிலாந்தின் புதிய பிரதமராக பதிவியேற்க உள்ள கென்சர்வேடிவ் கட்சியின் டேவிட் கெமரூன் லண்டன் நகரில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் ராணி இரண்டாம் எலிசபெத்தை சந்தித்தார்.




# 300 ஆண்டுகளில் பூமியின் வெப்பம் மனிதர்கள் வாழ முடியாதவாறு உயரும்!

பூமி தொடர்ந்து வெப்பமாகி வருகிறது. இது பற்றி அவுஸ்திரேலியாவில் உள்ள நியூ சவுத் வெல்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞா னிகளும் அமெரிக்காவின் பர்டியூ பல்கலைக் கழக விஞ்ஞானிகளும் ஆய்வு செய்து வரு கிறார்கள்.

இந்த ஆய்வு மூலம் அடுத்த 300 ஆண் டுகளில் இப்போது இருப்பதை விட 53 டிகிரி பாரன்ஹூட் அளவுக்கு வெப்பம் உயர்ந்து விடும் என்று அவர்கள் கணித்து இருக் கிறார்கள். இந்த அளவுக்கு வெப்பம் உயர்ந் தால் அப்போது பூமியில் மனிதர்கள் உயிர் வாழ முடியாத நிலை ஏற்பட்டு விடும் என்று அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

மேலும் சீனா, பிரேசில் ஆகிய நாடு களின் பொருளாதார வளர்ச்சி காரணமாக இயற் கை வளங்களில் 3 இல் ஒரு பகுதி அழியும் அபாயம் ஏற்பட்டு உள்ளது என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்து இருக்கிறார்கள். (2-6)

# பாடசாலையில் நுழைந்த மர்மமனிதன் நடத்திய கத்திக்குத்தில் 7சிறுவர் பலி

## சீனாவில் பயங்கரம்




(பீஜிங்)

சீனாவில் மர்ம மனிதன் ஒருவன் பாடசாலையில் புகுந்து நடத்திய கத்திக் குத்து தாக்குதலில் ஏழு சிறுவர்கள் உயிரிழந்தனர். 20 சிறுவர்கள் படுகாயமடைந்தனர். இச் சம்பத்தில் ஆசிரியர் ஒருவரும் பலியானார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

சீனாவின் வடமேற்கு சான்ஷி மாகா ணத்தில் நன்செங் கவுன்டி என்ற இடத்தில் சிறுவர் பாடசாலை ஒன்று உள்ளது. நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு சிறுவர்கள் பாடசாலை உள்ளே வந்து கொண்டிருந் தனர்.

அந்த சமயத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்த மர்ம மனிதன் ஒருவன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எதிரில் வந்த சிறுவர்கள் சரமாரியாக குத்தினான்.

இதில் ஏழு சிறுவர்கள் துடிதுடித்து இறந்தனர். மர்ம மனிதனின் தாக்குதலில் ஆசிரியர் ஒருவரும் பலியானார். மேலும் 20 சிறுவர்கள் படுகாயமடைந்தனர். அவர்களில் 11 பேர் நிலை கவலைக்கிடமாக உள்ளது. தாக்குதல் நடத்தியவன் தன்னைத் தானே கத்தியால் குத்தி தற்கொலை செய்து கொண்டான்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த சீன அதிபர் ஹூ ஜிண்டாவோ, பிரதமர் வென்ஜி யாபோ ஆகியோர் உத்தரவிட்டுள் ளனர். கடந்த மார்ச் மாதம் முதல் சிறுவர்கள் பாடசாலைகளில் நடக்கும் ஐந்தாவது கொலை வெறி தாக்குதல் சம்பவம் இது.

சீன நகர்ப்புற வீடுகளில் ஒரு தம்பதி ஒரு குழந்தை தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கட்டுப்பாடு உள்ளது. இந்தச் சூழ் நிலை யில் சிறுவர்கள் பலியாகி இருப்பது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. (2-6)

# சீனாவில் கடும் மழை 86 பேர் பலியாகினர்

(பீஜிங்)

சீனாவில் கடந்த வாரம் பெய்த பலத்த மழைக்கு 86 பேர் பலியாகியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வரு வதாவது, சீனாவின் அன்ஹூய், புஜியான், ஜியா ங்கி, ஹூபி, ஹுனான், குவாங்டாங், சிச்சு வான், குய்சோ உள்ளிட்ட மாகாணங்களில் புயல் காரணமாக கடந்த வாரம் பலத்த மழை பெய்தது.

இந்த மழையால் 79 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

வெள்ளம், நிலச்சரிவு உள்ளிட்ட காரணங் களால் 86 பேர் பலியாகியுள்ளனர். 16 பேரைக் காணவில்லை. வீடுகளை இழந்த 2 இலட்சத்து 75 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் . ஏராளமான பயிர்கள் இந்த மழையில் சேத மாகியுள்ளன. (2-6)

# ஐஸ்லாந்து எரிமலை குமுறல் சாம்பல் வட ஆபிரிக்காவை நோக்கி நகர்வு

ஐஸ்லாந்து எரிமலைக் குமுறலால் வெளிப்பட்ட சாம்பல் முகில்களிலொன்று வடஆபிரிக்கப் பிராந்தியத்தை நோக்கி நகர்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இந்தச் சாம்பல் முகிலால் தென்ஸ்பெயினிலான விமானப் போக்கு வரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் முதல் தடவையாக வட ஆபிரிக்க விமான சேவைகளை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப் படுகின் றது.

மொரோக்கோவானது ராபத், கஸபி ளான், கா மற்றும் ஏனைய 3 விமான நிலையங்களிலிருந்தான விமான சேவை களை இடைநிறுத்தியுள்ளது.

ஸ்பெயினில் 7 விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. (2-6)



பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற அதிபர் குளோரியா மகாபகலக் அரோயா தனது ஆதரவாளர்களை பார்த்து கையசைக்கிறார்.

# நளினியின் புகார்களை விசாரிக்க புதிய குழுவொன்று அமைப்பு

## தமிழக சட்டப் பேரவையில் தெரிவிப்பு

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினி கூறியிருக்கும் புகார்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு குழு ஒன்றை தமிழக அரசு அமைத்திருக்கிறது. இந்தத் தகவலை தமிழக சட்ட அமைச்சர் துரை முருகன் சட்டப்பேரவையில் நேற்று தெரிவித் தார்.

ராஜீவ் கொலை வழக்கில் கைதாகி வேலூர் பெண்கள் சிறையில் நளினி அடைக்கப்பட்டிருக்கிறார். அண்மையில் சிறைத்துறை ஏ.டி.ஜி.பி.கே.ஆர். ஷ்யாம் சுந்தருக்கு புகார்க் கடிதம் ஒன்றை அவர் அனுப்பியிருந்தார்.

அதில் தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் உணவில் நஞ்சு கலக்க முயற்சி நடத்திருப்பதாகவும் சிறைத்துறை அதிகாரிகள் தமக்குக் கொடுமை இழைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து சட்டப் பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர் ஞான சேகரன் கேள்வியெழுப்பினார். இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் துரை முருகன் நளினியின் புகார்கள் குறித்து விசாரணை நடத்துவதற்குக் குழு அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் கோவை சிறைத்துறை டிஐஜி கோவிந்தராஜன் தலைமையிலான இந்தக் குழுவில் பெண் அதிகாரி ஒருவர் இடம்பெற்றிருப்பதாகவும் விரைவில் விசாரணை அறிக்கையை இந்தக்குழு தாக்கல் செய்யும் எனவும் துரைமுருகன் தெரிவித்திருக்கிறார். (2-6)

# இந்திய மத்திய அரசை கண்டித்து பேரணி; பா.ஜ.க.தலைவர்கள் கைது




(புதுடில்லி)

சிபிஐ - யை மத்திய அரசு தவறாக பயன்படுத்தி வருகிறது என்று கூறி கண்டனப் பேரணி நடத்திய பா.ஜ.க தலைவர்களை பொலீஸார் கைது செய்தனர்.


பா.ஜ.க மூத்த தலைவர்கள் ஓ.பி.கோஹ்லி, விஜய் கோயல் உள்ளிட்டோர் தலைமையில் பா.ஜ.க தொண்டர்கள் டில்லியில் கடந்த புதன்கிழமை இந்தக் கண்டனப் பேரணியை நடத்தினர்.

நாடாளுமன்றத்தை நோக்கி நடந்த இந்தப் பேரணியின் முடிவில் தலைவர்களை ஜந்தர் மந்தர் அருகே பொலீஸார் கைது செய்தனர். பேரணியின் முடிவில் ஜந்தர் மந்தரில் பொதுக் கூட்டத்துக்கு பா.ஜ.க ஏற்பாடு செய்திருந்தது.

கூட்டத்தில் விஜய் கோயல் பேசியதாவது, போபர்ஸ் ஊழல் வழக்கில் குவாத்ரோச்சியை விடுவிக்க சிபிஐ - யை மத்திய அரசு தவறாக பயன்படுத்தியது. அதைப் போலவே சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தில் ஜெகதீஷ் டைட்லரை விடுவிக்கவும் சிபிஐ தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ரூ 7 ஆயிரம் கோடி ஊழல் நடந்துள்ள 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு ஊழலில் மத்திய அரசு இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு நண்பனாக சிபிஐ இருந்து வருகிறது என்றார் அவர். பா.ஜ.க தலைவர்களின் பொதுக்கூட்டம் முடிந்ததும் பா.ஜ.க தலைவர்களை பொலீஸார் கைது செய்தனர். (2-6)

# இலங்கை செல்லவுள்ள சல்மான்கான், விவேக் ஓபராய்க்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவோம்

## சீமான் அறிவிப்பு



இலங்கை செல்லவுள்ள சல்மான்கான், லாராதத்தா, விவேக் ஓபராய் ஆகியோருக்கு எதிராக போராட்டம் விரைவில் அறிவிக்கப்படும் என்று சீமான் கூறியுள் ளார்.

இதுகுறித்து நாம் தமிழர் அமைப்பின் தலைவர் சீமான் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கையின் கொடூர முகத்தை மறைப்பதற்காக இந்திய அரசின் உதவியுடன் இலங்கை அரசு கொழும்பில் சர்வதேச திரைப்பட விருது வழங்கும் விழாவை வரும் ஜூன் 2 ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரை நடத்த திட்டமிட்டுள்ளது. இதில் இந்தி நடிகர் அமிதாப் பச்சன் முக்கிய, பங்காற்றுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழர்களின் இனப் படுகொலையை மறைப்பதற்காக நடத்தப்படும் இந்த விருது வழங்கும் நிகழ்ச்சியில் அமிதாப் கலந்து கொள்வதற்கு கண்டனம் தெரிவித்து, எமது நாம் தமிழர் தொண்டர்கள் மும்பையில் உள்ள அமிதாப்பின் வீட்டிற்கு முன் சில வாரங்களுக்கு முன் முற்றுகைப் போராட்டம் நடத்தினர். 10 கோடித் தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக்கூடாது என்று கோரிக்கை மனுவையும் அளித்தனர்.

அதன் தொடர்ச்சியாக மீண்டும் கோரிக்கையை வலியுறுத்தியும் தமிழர்களுக்கு சாதகமாக கொழும்பில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் கலந்து கொள்ள மாட்டேன் என்று இறுதி முடிவு எடுக்கும்படி வற்புறுத்தியும் நடிகர் அமிதாப் மற்றும் ஐஸ்வர்யாராய் ஆகியோர் மும்பையில் வசிக்கும் பிரதிக்ஷா வீட்டின் முன் நாம் தமிழர் இயக்கத்தால் காலவரையற்ற உண்ணாநிலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாம் தமிழர் இயக்கத்தின் போராட்டத்தின் விளைவாக அதுகுறித்து பரிசீலித்த அமிதாப் ஐஃபா விருது வழங்கும் கமிட்டியில் இருந்து விலகிக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார். மேலும் தனது மகன் அபிஷேக் பச்சன் மற்றும் ஐஸ்வர்யாராய் இதில் பங்கேற்க மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக புதன்கிழமை ஐஃபா விருது வழங்கும் கொமிட்டியானது அமிதாப்பை தூதர் பதவியில் இருந்து விடுவித்தது.

அமிதாப்புக்கு பதில் நடிகர் சல்மான் கானை புதிய தூதராக நேற்றுக்காலை நியமனம் செய்துள்ளது. லாரா தத்தா, விவேக் ஓபராய் ஆகியோரும் தூதர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழர்களின் ஒப்பாரியும் மரண ஓலமும் ஆட்சியில் இருக்கும் இந்தியர்களுக்கும் அவர்களை அண்டி இருக்கும் திராவிடர்களுக்கும், சில தமிழர்களுக்கும் புரியாத நிலையில் எங்கோ உத்தரப் பிரதேசத்தில் பிறந்த நடிகர் அமிதாப்பச்சனுக்கு புரிந்திருக்கின்றது. அதனை அவர் உணர்ந்து கொண்டு கொழும்பு சர்வதேச திரைப்பட விழாவிற்கு செல்ல மறுத்திருக்கின்றார்.

அவரது பெருந்தன்மைக்கும் இந்திய நாக மதித்து எமது குரலுக்கு செவிமடுத்த பாங்குக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இனி புதிதாகப் பொறுப்பேற்றுள்ள சல்மான் கான், லாராதத்தா, விவேக் ஓபராய் ஆகியோருக்கு எதிரான போராட்டம் விரைவில் அறிவிக்கப்படும் என்று சீமான் கூறியுள்ளார். (2-6)




# மூன்றாவது நாளாகவும் செங்கல்பட்டு முகாமில் அகதிகள் உண்ணாவிரதம்

(செங்கல்பட்டு)

செங்கல்பட்டு அகதிகள் முகாமில், இலங்கையைச் சேர்ந்த 17 அகதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

தங்கள் மீதுள்ள வழக்குகளை விரைந்து முடித்து இலங்கைக்கு அனுப்பி வைக்கக் கோரி 11 அகதிகள், உண்ணா விரதம் இருந்து வருகின்றனர். 3ஆவது நாளாக நேற்று முன்தினம் போராட்டம் நீடித்தது.

கியூ பிரிவு இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜன் நகர பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆல்பர்ட் வில்சன், செங்கல்பட்டு தாசில்தார் கணேசன் ஆகியோர் உண்ணாவிரதத்தை கைவிடும்படி கேட்டுக்கொண்டனர். எங்களை விடுவிக்க உத்தரவு பிறப்பித்தால் தான் போராட்டத்தை நிறுத்துவோம் என அகதிகள் கூறிவிட்டனர். (6)


# நாக்கு நுனியில் நாடுகளின் பெயர் அசத்துகிறான் ஆறுவயதுச் சிறுவன்

(மதுரை)

உலக வரைபடத்தில் உள்ள 195 நாடுகளை காண்பித்து அவற்றின் பெயர்களையும் உச்சரிப்பு மாறாமல் கடகடவென சொல்கிறான் ஆறுவயது மாணவன் எஸ்.ஏ.முகமது ஆசிக். மதுரை நாய்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் யு.கே.ஜி முடித்த இம்மாணவன் இந்தாண்டு தான் முதலாம் வகுப்பு சேர்கிறான். எந்தநாடு எங்கிருக்கிறது எனக் கேட்டாலும் வரைபடத்தில் அழகாய் சுட்டிக்காட்டுகிறான்.

அதேபோல் வரைபடத்தைப் பார்க்காமலேயே இந்தியா அருகிலுள்ள நாடுகளைக் கேட்டாலும் சொல்கிறான்.

பள்ளி முதல்வர் நிர்மலா கூறுகையில், கடந்தாண்டு இம்மாணவர் 194 உலக நாடுகளின் பெயர்களை சரியாகச் சொன்னான்.




வரைபடத்தில் நாடுகளின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது பெயர் இல்லாம லேயே எந்த நாடு எங்கிருக்கிறது என சரியாக சொல்வதற்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றார். (2-6)

# வேலூர் பெண்கள் சிறையில் நளினி-முருகன் சந்திப்பு

(வேலூர்)

வேலூர் பெண்கள் சிறையில் நேற்று முன்தினம் நளினி-முருகன் சந்திப்பு நடந்தது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினி, வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதே வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அவரது கணவர் முருகன், வேலூர் மத்திய ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவர்கள்இருவரும் 15 நாட்களுக்கு ஒரு முறை சந்தித்துப் பேச சிறைத்துறை நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. அரைமணி நேரம் நடந்த இந்த சந்திப்பின் போது, நளினி விடுதலை குறித்தும், தங்கள் மகள் ஹரித்ரா வின் எதிர்காலம் குறித்தும் பேசியதாக சிறைத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (2-6)

# கடுகஸ்தோட்டையில் இடம்பெற்ற வாகன விபத்தில் 8பேர் படுகாயம்

(கொழும்பு)

கண்டி, கடுகஸ்தோட்டையில் நேற்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மணவர்கள் நால்வர் உட்பட 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடுகஸ்தோட்டை தொரகமுவ எனும் இடத்தில் காரொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து இடம்பெற்றது. இதன்போது அருகிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்த இந்த 8 பேரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்நிலையில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஆவரங்கால் நடராஜ இராமலிங்க மாணவனுக்கு

## மாகாண மட்ட, தேசிய மட்ட விருது



(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்ட வாய்ச் சுகாதார சுவரொட்டி சித்திரப் போட்டியல் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய தரம் 10 மாணவர் ஸ்ரீகரன் செந்தாரகன் மாகாண மட்டத்தில் அதிசிறந்த பெறுபேற்றுக்கான விருதினையும், தேசிய மட்டத்தில் சிறந்த பெறுபேற்றுக்கான விருதினையும் பெற்றுள்ளார்.

இவருக்கான விருது நாளை சனிக்கிழமை கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள விழாவில் வழங்கப்படவுள்ளதாக அதிபர் அறிவித்துள்ளார். (6-4)

# வெள்ளை வானில் வந்தவர்களால் மட்டக்களப்பில் இளைஞர் கடத்தல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஜீவபுரம் சந்தி வெளிப் பகுதியைச சேர்ந்த இளைஞொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வெள்ளை வானொன்றில் வந்தோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

யோகராசா ஜெயசீலன் (24 வயது) என்பவரே கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அவரது பெற்றோர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர் முன்னர் போராட்டக் குழுவொன்றில் உறுப்பினராகவிருந்து வன்னிப் போரின் பின்னர் கைதிகள் தடுப்பு முகாமில் இருந்தார். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விடுதலை செய்யப்பட்டு ஊருக்குத் திரும்பிய இவர் வீட்டின் அருகே பலசரக்குக் கடையொன்றை நடத்தி வந்துள்ளார்.

செவ்வாய்கிழமை இரவு வான் ஒன்றில் வீட்டிற்கு வந்த குழுவினர் இவரது பெயரைக் கூறி அழைத்துள்ளனர். அதன்பின்னர் வேலை வாய்ப்பொன்றை பெற்றுக்கொடுக்க உரிய ஆவணங்களை தருமாறு கூறியுள்ளனர்.

ஆவணங்களைக் கொடுத்தபோது இவரைத்தூக்கி வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளைவானில் வந்தவர்களில் ஒருவர் நன்றாகத் தமிழ் பேசியதாகவும் ஏனையோர் கொச்சை மொழியில் கதைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (6)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

**ஒதுக்கீட்டு சட்டமூலம்**

ஒதுக்கீட்டுச் சட்ட மூல முதல் வாசிப்பை பாராளுமன்றத்தில் அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடத்த அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

2010 வருடத்துக்கான அரசாங்க செலவினத்துக்கான நிதியை ஜூலை மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் ஒதுக்கீட்டு சட்டமூலம் ஊடாக பாராளுமன்றத்தில் நிறைவேற்ற அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அதன்படி ஒதுக்கீட்டு சட்டமூல முதல் வாசிப்பை பாராளுமன்றத்தில் அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடத்தவும் வரவு செலவுக்கான திட்டத்துக்கான முதல் வாசிப்பை அதே மாதம் 29 ஆம் திகதி நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி உப மின் நிலையம்**

1983 ஆம் ஆண்டு புலிகளால் முற்றாக அழிக்கப்பட்ட கிளிநொச்சி உப மின் நிலையத்தின் புனரமைப்புப் பணிகளை ஜப்பான் நிதியுதவித் திட்டத்தின் கீழ் அடுத்த வருடம் மே மாதத்திற்குள் முற்றாக பூர்த்தி செய்வதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

மின்சக்தி வலுசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

ஜப்பான் இதற்கு இரண்டு கட்டங்களாக உதவி வழங்குகிறது. முதல்கட்டமாக 1.17 பில்லியன் ரூபாவையும் இரண்டாம் கட்டமாக 1.79 பில்லியன் ரூபாவையும் வழங்குகிறது.

**மருந்து கொள்வனவுக்கான துரித திட்டம்**

அரசாங்க வைத்தியசாலைகளின் அவசரத் தேவைகளுக்கான மருந்து வகை கள் சத்திரசிகிச்சைக்கான நுகர்வுப் பொருட் கள் போன்றவற்றை துரிதமாகக் கொள் வனவு செய்வதற்கான திட்டம் ஒன்றுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சர் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். அதனடிப்படையில் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் மூலம் குறிப்பிடப்பட்ட மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. அதற்காக சம்பந்தப்பட்ட, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன. மேலும் மருந்து வகைகளின் தரம் குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

450 மில்லியன் ரூபாவுக்கு உட்பட்ட மருந்துத் தொகை கொள்வனவு செய்யப்படவுள்ளது.

**புதிய தேசிய கல்விக் கொள்கை**

புதிய தேசிய கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு மாகாண சபைகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய கல்வி ஆணைக்குழு புதிய தேசிய கல்விக் கொள்கை வகுப்பதற்கான ஆலோசனைகளை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ளது.

இந்த ஆலோசனைகளை முதற்கட்ட கலந்துரையாடலுக்காக கல்வி ஆலோசனை செயற்குழுவிடம் சமர்ப்பிக்கவும் அதனையடுத்து மாகாண சபைகளின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (6)

# மின் விநியோக துண்டிப்பிற்கு முன் சிவப்பு நிற ரசீதை அனுப்ப உத்தரவு

(கொழும்பு)

பாவனையாளர்களுக்கான மின் விநியோகத்தைத் துண்டிப்பதற்கு முன்னர் அது தொடர்பில் அறிவிக்கும் வகையிலான சிவப்பு நிற ரசீதை அனுப்பிவைக்குமாறு மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சினால் இலங்கை மின்சார சபைக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சிவப்பு நிற ரசீது அனுப்பி வைப்பதற்கு முன்னரே பம்பலப்பிட்டி பகுதியிலுள்ள பாவனையாளர் ஒருவரின் வீட்டுக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக செய்யப்பட்ட முறைப்பாட்டினை அடுத்தே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு மற்றும் கண்டி மாவட்ட பாவனையாளர்கள் சிலருக்கான மின்விநியோகமும் இவ்வாறே எவ்வித அறிவித்தலுமின்றி துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சின் செயலாளர் எம்.எம்.சி.பெர்டினாண்டோ குறித்த பாவனையாளர்களின் முறைப்பாடு சரியானது என்றும் சிவப்பு நிற ரசீது அனுப்பப்படாமல் மின்விநியோகத்தைத் துண்டிக்க முடியாது என்றும் கூறினார். (2-6)

# வீடுடைப்பை எதிர்த்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித் தெருவில் வீடுகள் உடைக்கப்பட்டதை எதிர்த்து இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வேகந்த பள்ளிவாசல் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

கொழும்பு குடியிருப்புகள் பாதுகாப்பு மன்றத்தின் ஏற்பாட்டிலேயே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

இதுதொடர்பாக இம் மன்றத்தின் அமைப்பாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான ஷரப்தீன் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அடக்குமுறைக்குத் தொடர்ந்தும் இடமளிக்க முடியாது. கொம்பனித் தெருவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுடைப்பு நாளை கொழும்பு முழுவதிலும் வியாபிக்கும். இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

எனவே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இன்று வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகைக்குப் பின்னர் வேகந்த பள்ளிவாசல் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்துகிறோம் என்றார். (2-6)

# தினமும் 45 ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோல் விநியோகிக்கப்படுகின்றது

## பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தேவைக்கமைய தினந்தோறும் 45 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருளை விநியோகிப்பதாக இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விநியோகப்பிரிவு அறிவித்திருக்கின்றது.

கொலன்னாவ, கபுகஸ்கந்த ஆகிய எரிபொருள் மத்திய நிலையங்களில் இருந்து நாடு பூராகவும் எரிபொருள் விற்பனை செய்யப்படுகிறது. இதன் போது எவ்வித தாமதங்களும் ஏற்படுவதில்லை என்று கூட்டுத்தாபனத்தின் விநியோகப்பிரிவு வலியுறுத்தியிருக்கின்றது.

மேலும் கொலன்னாவை ஏனைய களஞ்சியங்களில் இருந்து எரிபொருளை விநியோகிக்கும் போது சில சிக்கல்கள் ஏற்பட்டிருந்தாலும் அவற்றுக்கு தற்போது முடிவுகாணப்பட்டிருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விநியோகப்பிரிவு அறிவித்திருக்கின்றது. (2-6-4)

# மின்சார மனிதன் பொலிஸாரால் கைது

அதிக அழுத்த மின்வயரை பிடித்தவாறு எந்தப் பாதிப்புமில்லால் நிற்கும், மின்சார மனிதனை பொலிஸார் பிடித்து விசாரித்து வருகின்றனர்.

சென்னை, அண்ணாசாலை, தேனாம்பேட்டைப் பகுதியில் உள்ள வங்கி ஒன்றின் முன்பு உள்ள டிரான்ஸ்பார்மரில் உள்ள அதிக மின் அழுத்த வயரை ஒருவர் பிடித்துக்கொண்டிருப்பதாக பொலிஸாருக்கு தகவல் வந்தது.

இதையடுத்து, அங்கு விரைந்த பொலிஸார் குறித்த நபரை பிடித்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்தனர்.

மின்சாரம் தொடர்பான விடயங்களில் அதிக ஈடுபாட்டுடன் இருக்கும் இவருக்கு அதிக மின் அழுத்த கம்பிகளை பிடித்தாலும் ஷாக் அடிப்பதில்லை என்று கூறப்படுகிறது.

இது தொடர்பில் இவர் பல இடங்களுக்குச் சென்று இதை நிரூபித்தும் காட்டியுள்ளார். (2-6)

# நவீன மயப்படுத்தப்படவுள்ள கரையோர ரயில் சேவை

(கொழும்பு)

மணித்தியாலத்துக்கு நூறு கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக் கூடிய விதத்தில் கரையோர ரயில் சேவை மூன்று கட்டங்களாக நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

இச் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக காலி -மாத்தறை நிலையங்களுக்கிடையிலான ரயில் பாதையை நவீனமயப் படுத்தும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையா ளர் பீ.பி. விஜேசேகர தெரிவித்தார்.

முதற்கட்டப் பணிகள் இரண்டு முதல் மூன்று மாதங்களில் நிறைவு பெறுமென்றும் இந்த நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்கள் அப்பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகளின் இரண்டாம் கட்டத்தில் காலி -களுத்துறை ரயில் பாதையும் மூன்றாம் கட்டத்தில் களுத்துறை - கொழும்பு ரயில் பாதையும் நவீன மயப்படுத்தப்படுமென அவர் தெரிவித்தார். -(6)

முதன் முதலாக நீங்கள் எதையாவது செய்யுங்கள். பின்னால் வருபவர்கள் அதை இன்னும் அழகாகச் செய்வார்கள். – பாப்லோ பிக்காஸோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எங்கள் பண்பாட்டு உடைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

எதையும் ஆவணப்படுத்தாத–எதன் மீதும் அக்கறை கொள்ளாத மனநிலை எங்களிடம் உண்டென்பதை கௌரவமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதேநேரம் குறைபாட்டை முன்வைத்து அதில் எழும் வாதப் பிரதிவாதங்களுடன் காலத்தைக் கழிப்பதும் தொடர் பலவீனத்தையே தரும்.

எனவே எஞ்சியுள்ள எங்கள் பண்பாட்டு உடைமைகளையேனும், பாதுகாக்க வேண்டிய அவசியப்பாடு எமக்குண்டு.

ஒரு இனம் தனது இருப்பை உறுதிசெய்ய வேண்டுமாயின், தான் சார்ந்த மொழியிலும் பண்பாட்டு விழுமியங்களிலும் மிகவும் கரிசனை கொள்வது அவசியம்.

இதில் இருந்து விலகும் ஒவ்வொரு கணமும் அந்த இனத்தின் இருப்பு வேர்கள் அறுபட்டுக்கொண்டே இருக்கும்.

ஏனெனில் மொழியின் சிதைவுகள் பண்பாட்டையும், பண்பாட்டின் சிதைவுகள் மொழியையும் பாதித்து ஒட்டுமொத்தத்தில் இனத்தை வேரோடு படவைத்து விடும்.

ஆகையால் மொழி, பண்பாடு, இனத்துவ அடையாளங்கள் என்பவற்றைப் பாதுகாப்பது இனத்தின் இருப்பிற்கு மிகவும் அவசியம்.

எனினும் யுத்த சூழ்நிலையும், மக்களின் மனநிலையும், கலாசார விழுமியங்களைப் பேணும் அமைப்புகளின் பஞ்சத்தனமும் எங்களை வெறுவிலிகளாக்க முற்பட்டுள்ளன.

இந்த வெறுமை நாம் தமிழர்கள் என்பதையும், நாம் வாழும் மண் எங்கள் பூர்வீகம் என்பதையும் நிராகரிப்பதற்கு உதவும் என வல்லமை பொருந்தியவர்கள் நம்புகின்றனர்.

அந்த நம்பிக்கையை உடைத்தெறிந்து எங்கள் அடையாளங்களைப் பாதுகாத்து அடுத்த சந்ததியிடம் கையளிக்கும் பாரிய பொறுப்பு எங்கள் முன் உண்டு.

இந்த உயர் பணியை நிறைவேற்ற கலாசார உத்தியோகத்தர்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

அரசினால் நியமிக்கப்பட்ட கலாசார உத்தியோகத்தர்கள் "சும்மா" இருப்பதை தமிழின எதிர்ப்பாளர்கள் நிச்சயம் விரும்புவர்.

ஆனால் கலாசார உத்தியோகத்தர் ஒருவர் தனது பணியைச் செம்மையாக செய்யாமல் விடுவாராயின், அவர் தமிழினத்தின் அழிப்பிற்கு உதவுகின்றார் என்றே பொருள்படும்.

ஆக, கலாசார உத்தியோகத்தர்கள் இனப்பற்றுடன் கடமை என்ற எல்லைக் கடந்து களத்தில் இறங்கி தமிழினத்தின் வரலாற்றுப் பொக்கிஷங்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

உங்களின் இந்தப் பணி தமிழினத்தின் விடிவிற்கு நிச்சயம் உதவும்–வழிசமைக்கும். ஏங்கே பார்க்கலாம்.

# தமிழ் மொழி பெயர்ப்பாளருக்கான புலமைப்பரிசில் ஆஸியில் ஆரம்பம்

(கொழும்பு)

விக்டோரியா மாநில அரசின் பல்லினக் கலாசாரச் சபையின் கோரிக்கைக்கிணங்க விக்டோரியா மாநில அரசினால் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தமிழ் மொழி பெயர்ப்பாளர்களுக்கான டிப்ளோமா புலமைப்பரிசில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

தரமான, தகுதிபெற்ற மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்கும் முகமாக முதல் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான வகுப்புகள் மெல்பேர்ண் RMIT பல்கலைக்கழக வளாகத்தில் தற்போது நடைபெற்று வருகின்றன.

வகுப்பில் கற்றுக்கொண்டிருப்போரை வாழ்த்தும் வைபவம் ஒன்றை அண்மையில் விக்டோரியா மாநில அரசு ஒழுங்கு செய்திருந்தது. விக்டோரியா பாராளுமன்றத்தின் ராணி மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெற்றது.

இதில் பல்லினக் கலாசார அமைச்சர் ஜேம்ஸ் மேர்ளினோ மாணவர்களை வாழ்த்தி அவர்களுக்கு நற்சான்றிதழ் களையும் தாசோலைகளையும் வழங்கினார்.

பல்லினக் கலாசார சபைத் தலைவர் ஜோர்ஜ் லிகாகிஸ், விக்டோரியா பல்லினக் கலாசார சபை ஆலோசனைக்குழு உறுப்பினர் என்.ஆர். விக்கிரமசிங்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், குடிவரவுத்திணைக்கள மாநில நிர்வாகத்தினர், RMIT பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோரும் இவ்வைப வத்தில் கலந்து சிறப்பித்தனர். (2–6)


# மின்விநியோக துண்டிப்பிற்கு முன் சிவப்பு நிற ரசீதை அனுப்ப உத்தரவு

பாவனையாளர்களுக்கான மின்விநியோகத்தைத் துண்டிப்பதற்கு முன்னர் அது தொடர்பில் அறிவிக்கும் வகையிலான சிவப்பு நிற ரசீதை அனுப்பி வைக்குமாறு மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சினால் இலங்கை மின்சார சபைக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த் சிவப்புநிற ரசீது அனுப்பி வைப்பதற்கு முன்னரே பம்பலப்பிட்டி பகுதியிலுள்ள பாவனையாளர் ஒருவரின் வீட்டுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக செய்யப்பட்ட முறைப் பாட்டினை அடுத்தே இந்த அறிவுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு மற்றும் கண்டி மாவட்ட பாவனையாளர்கள் சிலருக்கான மின்விநியோகமும் இவ்வாறே எவ்வித அறிவித்தலுமின்றி துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 30 நாட்களுக்குள் மின்கட்டணம் செலுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அந்த பாவனையாளர்களுக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சின் செயலாளர் எம்.எம்.சி.பெர்னாண்டோ குறித்த பாவனையாளர்களின் முறைப்பாடு சரியானது என்றும், சிவப்புநிற ரசீது அனுப்பப்படாமல் மின்விநியோகத்தைத் துண்டிக்க முடியாது என்றும் கூறினார். (ச–5)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## நகை வாங்க நல்ல நாள்

ஒரு காலத்தில் பொங்கல், தீபாவளி , சரஸ்வதி பூசை இந்த மூன்று பெரிய பண்டிகைகளைத் தவிர மற்ற பண்டிகைகளுக்கு முக்கியதத்துவம் தருவதில்லை. இப்போது அப்படியல்ல. சிறிய விழாக்கள் கூட பெரிய அளவுக்குக் கொண்டாடப்படுகின்றன. தங்கத்தில் எவ்வளவு முதலீடு செய்தாலும் பிற்காலத்தில் உதவும் என்பது நீண்ட கால வாழ்க்கை நடைமுறையில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று.

குறிப்பாக தங்கம் விலை ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கத் தான் செய்யும் அதிலும் சமீப காலத்தில் மிக அதிகமாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு தங்கத்தில் முதலீடு செய்தவர்கள் இப்போது ஏறத்தாழ ஒரு மடங்கு லாபம் பெற்றுள்ளனர். அட்சய திரிதியை நாளில் நகை சேர்க்க வேண்டுமென்பதற்காகவே பெண்கள் பணம் சேர்க்கின்றனர். இது சேமிப்புப் பழக்கத்தை வளர்க்கிறது. ஆன்மீக ரீதியான நம்பிக்கைகள் தனி மனிதர்களின் பொருளாதாரத்தை வளர்க்கின்றன. எனும் போது இது போன்ற பண்டிகைகளை வரவேற்பது மிகவும் நல்லதுதான்.

# வெள்ளி நற்சிந்தனை

122

# பக்தியின் மொழி தமிழ்

மரண பயம் எல்லோருக்கும் உண்டு. உலகத்திலே பிறப்பது எல்லாம் இறப்பது உறுதி. எனினும் வாழ்நாளின் முடிவை எண்ணிப் பயப்படுவது பொதுவான இயல்பாக உள்ளது. இறைவழிபாடுதான் மரண பயத்தைப் போக்க வல்லது. இறைவனுடைய பாதங்களைச் சேர்வதே மனிதனுடைய வாழ்நாளின் இலக்காக இருக்க வேண்டுமென சைவ நாயன்மார்கள் தமது தேவாரப் பாடல்களிலே வலியுறுத்தியுள்ளனர். சம்பந்தர் இக்கருத்தினை மார்க்கண்டேயருடைய வரலாற்றின் மூலம் ஒரு பாடலிலே எடுத்துக் காட்டியுள்ளார். சிவனையே எந்நேரமும் வழிபடும் மெய்யடியாரான மார்க்கண்டேயருக்கு வாழ்நாட் காலம் பதினாறு வயதாக இருந்தது. எனவே பதினாறு வயதின் நிறைவில் கூற்றுவன் அவர் உயிரைக் கவரச் சென்றான். அவ்வேளையிலே மார்க்கண்டேயர் சிவபூசையிலே ஈடுபட்டிருந்தார்.கூற்றுவன் அவருடைய சிவ பூசையைக் கருத்திற் கொள்ளவில்லை. தன்னுடைய உயிர்கவரும் கடமையை நிறை வேற்றுவதிலேயே கருத்தாக இருந்தான்.

சிவ வழிபாடு செய்கின்ற மார்க்கண்டேயரைப் பாசக்கயிற்றால் பிணித்தான். சூலத்தினாலே குத்தி அவர் உயிரைக் கவர முயன்ற வேளையில் மார்க்கண்டேயர் தாம் பூசை செய்த சிவலிங்கத்தை இறுகத் தழுவிக் கொண்டார். சிவன் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டுத் தமது காலினால் உதைத்து யமனைத் தடுத்தார். கூற்றுவனும் சிவனை வணங்கி மார்க்கண்டேயரை விட்டுச் சென்றான். இந் நிகழ்வு இறைவன் தன்னை முழுமையாக நம்பியவரை ஒருபோதும் கைவிடமாட்டான் என்பதை நன்கு உணர்த்திற்று. இப்பண்பினைச் சம்பந்தர் பாடலிலே சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். எல்லோருக்குமே அருள் செய்கின்ற செம்மையான குணமுடைய இறைவனை *நம்மையாளுடையார்* எனக் குறிப்பிடுகின்றார். அவருடைய அருள் எமக்கு என்றும் உண்டு என்ற எண்ணம் கோயில் வழிபாட்டால் ஏற்படும்.

திருகோணமலைத் தலத்தின் தனிச்சிறப்புக்கு இயற்கைச் சூழல் காரணமாவதை பாடலில் இரு அடிகளிலே சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். கோயிலைச் சூழ உள்ள பூஞ்சோலை பற்றிய விரிவான செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பல்வேறு விதமான மலர்ச்செடிகள் அங்கு விரவிக் கிடக்கின்றன. மௌவல், மாதவி, புன்னை, வேங்கை, வண்செருந்தி, செண்பகம், குருந்து, முல்லை போன்ற பல பூக்களின் பெயர்கள் பாடலில் கூறப்பட்டுள்ளன. செடிகளும் கொடிகளும் மரங்களும் நெருங்கியிருக்கின்றன. கோயிற் சூழலில் மலர்த்தோட்டம் இன்றியமையாதது. அர்ச்சனைக்கு வேண்டிய மலர்களை அங்கிருந்தே பெறலாம். இயற்கைவளமான மலைத்தாவரங்களும்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

கடற்றாவரங்களும் ஒரு சேர இருப்பது கோயிற் சூழலுக்குத் தனித்துவத்தைக் கொடுக்கிறது. பல்வேறு வண்ணமலர்கள் இணைந்திருப்பது சூழலுக்குப் புதிய அழகைத் தருகிறது. அக்காலத்திலே பயன்படுத்தப்பட்ட மலர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் பாடல் உதவி செய்கிறது. இக் காலத்தில் மலர்ப் பண்பாடு சிதைவுற்று வருகிறது. இயற்கையான மணமுள்ள மலர்களைக் கைவிட்டுச் செயற்கையான மலர்களைப் பயன் படுத்தும் பண்பாடு முனைப்புப் பெற்று வருகிறது. எனவே சம் பந்தருடைய மலர்கள் பற்றிய அடிகள் பண்டைய பண்பாட்டுப் பதிவாகவும் அமைந்துள்ள தென்பது குறிப்பிடத் தக்கது.

"பரிந்து நன் மணத்தால் வழிபடும் மாணி தன்னுயிர்
மேல் வரும் கூற்றை
திரிந்திடா வண்ணம் உதைத்து அவற்கு அருளும்
செம்மையார் நம்மை ஆளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண்
செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமாமலை யமர்ந்தாரே"

# இலங்கை அரசாங்கம் தமிழர்கள் மீது பிறிதொரு தாக்குதலை தொடுத்துள்ளது

## தினமணி செய்தி

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் நடந்த போர் முடிந்து ஓராண்டு நிறைவடையும் இந்த நேரத்தில் வேறொரு விதமான தாக்குதலை தமிழர்கள் மீது தொடுத்திருக்கிறது இலங்கை அரசு. இவ்வாறு இந்திய தினமணி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களுக்கு கௌரவமான பிரதிநிதித்துவம் அளித்து வந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறையைக் கைவிடுவதற்கு இப்போதுள்ள அரசியல் சட்டத்தைத் திருத்துவது என்பது தான் இலங்கை அரசின் யோசனை. இந்தியா உள்ளிட்ட நாடுகளில் கடைப்பிடிக்கப் படும் தொகுதியில் அதிக வாக்குகள் பெற்று முதலிடம் பிடிக்கும் வேட்பாளரே வெற்றியாளர் என்ற தேர்தல் முறைக்கு இலங்கையும் மாறவிருக்கிறது.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இதில் என்ன குறை என்றே கேட்கத்தோன்றும். இந்தியாவைப் போல் பல்வேறு மொழி,இன குழுக்கள் அதிக எண்ணிக்கையில் இல்லை என்றாலும் இலங்கையில் சிங்களவர், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற மூன்று இனங்களே முக்கியமானவை.


கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறிய கடும் உழைப்பாளிகளின் வளர்ச்சியை சிங்களவர்களால் சகித்துக்கொள்ள முடியாமல் போனதால் தான் இங்கு இனப் பகை மூண்டது.

இப்போது தமிழர்களின் பகுதிகளில் சிங்கள மக்களை குடியமர்த்தும் நடவடிக்கை கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேக வேகமாக நடந்து வருகின்றன. இன்னமும் ஏராளமான தமிழர்கள் முள்வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் விட்டுவிட்டுப் போன ஊர்களிலும் வீடுகளிலும் இப்போது சிங்கள மக்கள் குடியிருக்கின்றனர். விவசாயம் செய்யவும் அவர்களுக்கு நிலங்கள் தரப் படுகின்றன.

இந்தப் பின்னணியில்தான் விகிதாசாரப் பிரதி நிதித்துவத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளரை வெற்றியாளராக அறிவிக்க சட்டம் திருத்தப்படுகிறது. தமிழர்களின் பகுதிகளில் கூட சிங்கள வேட்பாளர் அதிக எண்ணிக்கையில் வாக்குகளைப் பெறுவது என்பது இனி சாத்தியமே.

சிங்கள மக்களைக் குடியேற்றுவதால் மட்டும் உடனடியாக இதைச் சாதிக்க முடியாது என்பதால்,இப்போதுள்ள பாராளுமன்ற சட்ட மன்றத் தொகுதிகளையும் பிரித்து மறுவரையறை செய்யும் பணியும் தொடங்கவிருக் கிறது.

அதில் தமிழர்கள் நெருக்கமாக வசிக்கும்



பகுதி ஒரே தொகுதிக்குள் வராமல் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக உள்ள தொகுதிகளில் பரவலாகச் சேர்க்கப்படும் முயற்சிகள் தொடங்கிவிட்டன. இலங்கை பாராளுமன்றத்தில் தமிழர்களுக்குப் பிரதிநிதித்துவம் குறைந்துவிடுமே என்று கூறுவோருக்குப் பதில் அளிக்கவே, 25 உறுப்பினர்களைக் கொண்ட செனட் என்ற மேலவையைக் கொண்டு வரப்போவதாக அரசு அறிவித்துள்ளது. இதில் அறிஞர்களும்,சிறுபான்மைக் குழுக்களின் பிரதிநிதிகளும் இடம்பெறுவர் என்கிறது அரசு.

இதில் அரசின் நியமன உறுப்பினர்களும் இருப்பார்கள்.என்னதான் பிரதிநிதித்துவம் தரப்பட்டாலும் இந்த அவைக்கு அதிகாரங்கள் குறைவுதான்.

எனவே இதில் இடம்பெறுகிறவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டாலும் கூட இந்த அவையின் அந்தஸ்து என்பது பாராளுமன்றத்தைப் போல இல்லை என்பது வெளிப்படை.

ஜனாதிபதியாக இருப்பவர் இருமுறை தான் அந்தப் பதவிக்கு வரமுடியும் என்று இப்போதுள்ள அரசியல் சட்டத்தைத் திருத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது இப்போதுள்ள ஜனாதிபதி ராஜபக்ஷவை ஆயுள் கால அதிபராக்கும் முயற்சி என்றே கூறிவிடலாம்.

இந்த திருத்தங்களின் நோக்கம் எல்லோருக்கும் தெரிந்த நிலையில், இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில்தான் இந்த நடவடிக்கைகள் என்று இலங்கை அரசு கூறுவது தான் இரக்கமற்ற நகைச்சுவை.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசி யல் தீர்வு காண ராஜீவ்காந்தியும் ஜெயர்வர்த்தனவும் செய்துகொண்ட ஒப்பந்தம் பற்றி இப்போது பேச்சே கிடையாது.

தமிழர்களை இலங்கை மீது உரிமையுள்ள இனமாக அங்கீகரிக்கும்பேச்சோ, வடக்கும் -தெற்கும் அவர்களுடைய பாரம்பரிய தாயகம் என்பதை ஒப்புக்கொள்ளும் பெருந்தன்மையோ, தமிழர்களின் பகுதிகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்கி வளப்படுத் தும் நோக்கமோ, வடக்கையும் தெற்கையும் இணைத்து தமிழர்களின் கோரிக்கைகளை முழுமையாக இல்லாவிடினும் ஆறுதல் கொள்ளும் வகையிலாவது நிறைவேற்றும் நல்லெண்ணமோ இலங்கை அரசுக்கு இல்லை என்பது அப்பட்டமாக வெளிப்படுகிறது.

இந்த நிலையில், கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் தமிழர்களுக்கு இலங்கை எத்தகைய சலுகைகளையும் சமவாய்ப்புக்களையும் இனி அளிக்கப்போகிறது என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது.

தமிழர்களைத் தங்களுடைய சகோதரர்களாக பாவிக்காமல் எதிரிகளாகவே கருதுகிறது என்று அதன் சில நடவடிக்கைகள் உணர்த்துகின்றன.

இராணுவத்துடனான போரில் இறந்த வீரர்களின் சமாதிகளை வடக்கிலும் கிழக்கிலும் அமைத்த விடுதலைப்புலிகள், மாவீரர் தினத்தில் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி வந்தனர். இப்போது அந்தச் சமாதிகளை இடித்து அப்புறப்படுத்தி விட்டு இலங்கை இராணுவ வீரர்களுக்கு நினைவிடங்கள் அமைத்து வருகிறது.

தமிழர்களோடு சமரசமாகப் போக வேண்டிய அவசியமும் கூட, கடமையும் தங்க ளுக்கு இருப்பதாக இலங்கை அரசு கருதவில்லை என்பதையே இந்தச் செயல்கள் உணர்த்துகின்றன. இலங்கையில் இப்போது நிலவும் ஜனாதிபதி ஆட்சிமுறை பெரும்பான்மையினரின் ஆட்சிமுறை என்பதுதான் உண்மை.

பெரும்பான்மை சிங்களவரின் ஆதரவைப் பெற்றால் மட்டுமே அமெரிக்காவில் பராக் ஒபாமா அதிபரானதுபோல, ஒரு தமிழர் இலங்கையின் ஜனாதிபதியாக முடியும். இப்போது பாராளுமன்றத்திலும் தமிழர்களும் சிறுபான்மையினரும் குரலெழுப்ப முடியாத நிலைமைக்கு புதிய அரசியல் சட்டத் திருத்தம் வழிகோலப்போகிறது.

இத்தனைக்கும் பிறகு இந்திய அரசு இது அன்னியநாட்டு விவகாரம் என்று தலையிடாமல் தவிர்ப்பது ஏன் என்பதும், அப்பாவி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயல்படத் தயங்குவது ஏன் என்பதும் புதிராக இருக்கிறது என்று எழுதப்பட்டுள்ளது. (2-6)

---

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களிற்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.இதில் அதிபர்கள் யுனிசெப் படிவத்துடன் தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி யாழ். வலயக் கல்விப் பணிப்பபாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (4)

## திருநெறி தெய்வீக திருமுறை இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பருத்திக்கலட்டி அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தினால் வாகீசர் வார நிறைவு நாள் விழாவில் திருநாவுக்கரசு சுவாமிகள் இசை ஆராதனை விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் இரவு 7 மணிக்கு சங்கீத கலாநிதி முனைவர் நா.வி.மு.நவரத்தினம் குழுவினர் வழங்கும் திருநெறிய தெய்வீகத் திருமுறை இசையரங்கு நடைபெறும். (6)

## மக்களின் மீள்குடியேற்றமும் நாட்டின் அபிவிருத்தியுமே முக்கியமான விடயங்கள்

### இந்தியத் தூதுவர் அசோக் கே காந் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பரஸ்பரம் நம்பிக்கை ஏற்பட்டதன் விளைவாக பாரிய நன்மைக்ள் ஏற்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்தியத்தூதுவர் அசோக் கே காந் தெரிவித்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந் அண்மையில் வணக்கத்துக்குரிய பேராயர் மல்கம் றஞ்சித்தை சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருடகாலமாக நிலவி வந்த யுத்தம் தற்போது நிறைவடைந்துள்ளது. இந் நிலையில் தற்போது இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தவும் நாட்டின் அபிவிருத்தியும் தான் முக்கியமான விடயமாகும்.இதனை இலங்கை அரசாங்கம் மிக விரைவாக மேற்கொள்ளும் என்றும் இதற்கு இந்தியா உதவிகளை வழங்குமென்றும் கூறினார்.

இச் சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட பேராயர் மல்கம் றஞ்சித், இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களை மீள் குடியுமர்த்துவதற்கு அரசாங்கம் உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.அயல் நாடு என்ற வகையில் இந்தியா இலங்கைக்கு பல்வேறு விதமான உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை இலங்கையில் யுத்தம் முடிவடைந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று மிக விரைவில் எட்டபட வேண்டும் என்றும் கூறினார்.(2-(9)

## வலைப்பந்தாட்ட போட்டிகள்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் வலைப்பந்தாட்ட போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ளும் கழகங்கள் உரிய நேரத்துக்கு வருகை தந்து போட்டியில் கலந்துகொள்ளுமாறு கழகத்தினர் அறிவித்துள்ளனர். (4-24)


## கல்கி பகவான் உரை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பக்தர்களுக்கு ஸ்ரீ கல்கி பகவானின் உரை காண்பிக்கப் படவுள்ளதால் அடியார்களை இதில் கலந்து கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுள்ளனர். (4)

# நம்பியவர்கள் கைவிட்டனர்

## இலங்கை அணி அதிர்ச்சித் தோல்வி; இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது இங்கிலாந்து



(சென்லூசியா)

சகலதுறையிலும் பிரகாசித்த இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை இலகுவாக வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மேற்கிந்தியத்தீவுகளில் நடக்கும் ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று சென்லூசியாவில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் இலங்கை-இங்கிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பம் சறுக்கியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரியா ஒரு ஓட்டத்துடனும் திலகரட்ண டில்சான் 8 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 09 ஓட்டங்களுடனும் மஹேல ஜெயவர்த்தனா 9 பந்துகளில் (ஒரு பவுண்டரிகள் உட்பட) 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்ற இலங்கை அணி 4.1 ஓவர்களில் 26 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய குமார் சங்கக்கார-மத்யூஸ் ஜோடி அடக்கி வாசித்து அணியை சரிவிலிருந்து மீட்டது.

எனினும் அணித்தலைவர் குமார் சங்கக்கார 19 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 16 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து நீண்ட நேரம் நிலைக்கத்தவறினார்.

அடுத்து வந்த கபுகெதரா நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் மத்யூஸ் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தார்.

இதில் கபுக்கெதர 27 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 16 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 16.3 ஓவர்களில் 93 ஓட்டங்களை எடுத்து 5ஆவது விக்கெட்டையிழந்தது.

தொடர்ந்து பெரேரா களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி மத்யூஸ் 40 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்திசெய்தார்.

எனினும் அஞ்சலோ மத்யூஸ் 45 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 58 ஓட்டங்களை எடுத்தபோது ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 128 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பெரேரா ஆட்டமிழக்காமல் 7 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் பிரோட் 2 விக்கெட்டுக்களையும் பிரேஸ்னன், சயிட்பொத்தம், சுவான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தார்கள்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 129 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு கீஸ் வேற்றர்-லூம் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கி நம்பிக்கையளித்தது.

இந்த ஜோடி 8.1 ஓவர்களில் 68 ஓட்டங்களைக் குவித்தபோது கீஸ் வேற்றர் 29 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து லூம்புடன் இணைந்த கெவின் பீற்றர்சன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். எனினும் துஷார வீசிய 10ஆவது ஓவரில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகளை விளாசிய லூம்ப் 26 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த அணித்தலைவர் கொலின் வூட் 13 பந்துகளில் 10 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

எனினும் பீற்றர்சனின் அதிரடியில் இங்கிலாந்து அணி 16 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 132 ஓட்டங்களை குவித்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதில் கெவின் பீற்றர்சன் 26 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 42 ஓட்டங்களையும் மோர்கன் 2 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் பெரேரா 2 விக்கெட்டுக்களையும் மலிங்க ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

தொடரின் முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றி எதனையும் பெறாமல் அயர்லாந்து அணியுடனான போட்டி மழைகாரணமாக கைவிடப்பட கிடைத்த ஒரு புள்ளியுடன் சுப்பர்-8 சுற்றுக்கு முன்னேறிய இங்கிலாந்து அணி தொடர்ச்சியாக 4 வெற்றியைப்பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதேவேளை இப் போட்டியில் தோல்வியடைந்த இலங்கை அணி அரையிறுதிச் சுற்றுடன் தொடரிலிருந்து விடைபெற்றது.

# விண்ணப்பம் கோரல்கள்

### ஆராய்ச்சி உத்தியோகத்தர் கால்நடை உத்தியோகத்தர்

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையின் வகுப்பு II தரம் II இல் காணப்படும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் கால்நடை உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பங்களை 31.05.2010 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

✷ ✷ ✷

### கனிஷ்ட ஊழியர்களை முகாமைத்துவ உதவியாளராக சேர்த்தல்


அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமைத்துவ உதவியாளர் III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளரினால் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடத்தப்படவுள் ளது.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 14.06.2010ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம் இலங்கை பரீட்சைத் திணைக்களம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப்பரீட்சைக் கிளை பெலவத்தை பத்தரமுல்லை என்ற முகவரிக்கு தாம் சேவை புரியும் திணைக்களத்தின் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.


இவ் விண்ணப்பம் கோரல்கள் தொடர்பான மேலதிக விபரங்களை இன்று வெளியாகும் வர்த்தமானி பத்திரிகையிலோ அல்லது அலுவலக நேரத்தில் வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிடமுடியும். (ச)













கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற வீரர்கள் தினக் கொண்டாட்டத்தில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் மற்றும் ஆளுநர் ஜீ.எ.சந்திரசிறி ஆகியோர் மங்கல விளக் கேற்றுவதையும் அமைச்சர் டக்ளஸ் இராணுவ வீரர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என். குமார்)




## ஏழு பேரை...

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அங்கம் வகிப்போரின் பெயர்கள் அடங்கிய மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்பதுடன் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையிலான விடயங்களை அக் குழு விரிவாக ஆராயும் என்றார். (ச-5)

## இலங்கை அரசாங்கம்...

வில்லை. விசாரணை ஆணைக்குழுவுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

விசாரணை ஆணைக்குழுவுக்குரிய அதிகாரங்கள் தமக்கு வழங்கப்படவில்லை என அரசு அமைத்துள்ள குழுவின் செயலாளர் எஸ்.எம்.சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் விசாரணைக்குழு என்பது அதிகாரங்கள் அற்ற ஒரு ஆலோசனைக் குழு எனவும் அதனால் நியாயமான விசாரணைகளை மேற்கொள்ள முடியாது எனவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பெருமளவான விசாரணைக்குழுக்கள் முன்னர் இலங்கையில் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் அவை எவையும் தமது முடிபுகளைப் பொதுமக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை எனக் கொழும்பைத் தளமாகக் கொண்ட மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பைச் சேர்ந்த பவானி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்தவர்களைப் படுகொலை செய்தது, மக்கள் காணாமல் போனது குறித்த விசாரணைகளைக் கூட அரசு இதுவரையில் மேற்கொள்ளவில்லை என சமரக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசு தற்போது அமைத்துள்ள அறிக்கையை எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற போரில் பெருமளவான மக்கள் கொல்லப்பட்டது மற்றும் சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டது தொடர்பில் அமெரிக்கா தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

அமெரிக்காவின் காங்கிரஸ் சபை அதற்கான விசாரணைகளைக் கோரியிருந்தது. மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசு விசாரணைகளை மேற்கொள்ளத் தவறினால் வருடத்திற்கு 150 மில்லியன் டொலர்களை வருமானமாகப் பெறும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை அது இழக்கலாம் என அவதானிகள் தெரிவித்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## நாய்க்குச்...

யுவதியின் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். மற்றைய வீட்டில் எவரும் இல்லை.

அங்கு நாய் ஒன்றேயுள்ளது. அவ் வீட்டில் உள்ள நாய்க்குப் பிரஸ்தாப யுவதி சாப்பாடு வைப்பது வழக்கம். நேற்றிரவும் அவர் சாப்பாடு வைக்கச் சென்றுள்ளார்.

அங்கு சென்ற யுவதியை நீண்ட நேரமாகியும் காணாத நிலையில் அச்சமடைந்த குடும்பத்தினர் தேடுதலில் ஈடுபட்டனர். அப்போது தமது மற்றைய வீட்டுக்குச் சென்ற யுவதியைத் தேடியபோது கை,கால்கள் கட்டப்பட்டு வாய்க்குள் துணி அடைக்கப்பட்டு தலைக்கு கட்டும் றிபனினால் கழுத்து நெரிக்கப்பட்டும் கை, கால் பகுதிகளில் பிளேற்றினால் கீறப்பட்ட நிலையில் பலகை ஒன்றினால் மூடப்பட்டு யுவதி காணப்பட்டுள்ளார்.

உடனடியாக யுவதியை மீட்ட உறவினர்கள் நேற்றிரவு 8.25 மணியளவில் அவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

யுவதி அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5,9)




## கிணற்றில் விழுந்து வயோதிபப் பெண் மரணம்

சாவகச்சேரிப் பகுதியில் கிணற்றில் தவறி விழுந்து வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். சரசாலை தெற்கு, சாவகச்சேரியை சேர்ந்த பரமசாமி பொன்னம்மா (வயது-68) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்தவர் ஆவார்.

இவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-9)

## வவுனியா...

கோரியும் காணாமல் போனவர்கள் அரசின் பாதுகாப்பில் உயிருடன் இருந்தால் அவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும் அகதிகளாக்கப்பட்டுள்ள மக்களின் மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்தக் கோரியும் அவ் ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெறவுள்ளதாகத் தெரிவித்தார். (ச-5)

## நிதி ஒதுக்...

கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒதுக்கீடு செய்து கொண்டார்.

நிதி ஒதுக்கீடு சட்ட மூலத்திற்கான முதலாவது வாசிப்பு ஜூலை மாதம் இறுதியில் நிறைவு பெறும் என்பதுடன் முழுமையான வரவு-செலவுத் திட்டம் வருட இறுதியில் சமர்ப்பிக்கப்படும் என்றார். (ச-5)

**மாபெரும் இலவச அறிவூட்டல் கருத்தரங்கு**

**European College of Higher Studies**

Management, Law, Nursing, Q.S, Computer Studies, I.T போன்ற துறைகளில் G.C.E. O/L, A/L, பட்டதாரிகள் என சகலரும் கல்வி பயின்று ஐரோப்பிய நாடுகளில் (U.K, Canada, Cyprus, Australia, Germany, France) பல்கலைக் கழகங்களில், கல்லூரிகளில் கல்வி பயில அரிய வாய்ப்பு...

விரும்பிய மாணவர்கள் இலங்கையில் முதல் வருட படிப்பை முடித்துக் கொண்டு 2ஆம், 3ஆம் வருடங்களில் வெளிநாடு செல்லலாம்.

*15.05.2010: 09 AM - 01 PM* (பருத்தித்துறை சிவன் கோவில் கல்யாண மண்டபம்)

*15.05.2010: 02 -05 PM* (சாவகச்சேரி கலாசார மண்டபம்)

*16.05.2010: 10 AM-04 PM* (யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)

தொடர்புகளுக்கு:

European College of Higher Studies
315 1/2, Palaly Road,
(Parameswara Junction)
· Thirunelvely Jaffna)

VINSAN-078 9130859 Kokulan-0789118733
Prasanth-0772478303 Gaffoor-071 7065527
office-021 373 4747

(1394)

**வீடு விற்பனைக்கு**

ஆசாத் வீதி, யாழ்ப்பாணத்தில் 1 1/4 பரப்புக் காணியுடன் புதிதாகக் கட்டிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
27/8, ஆசாத் வீதி,
யாழ்ப்பாணம்.
071 2124527

(391)

## இலங்கை அரசை...

அரசியல் அமைப்புச் சீர்திருத்தமானது மூன்று படிமுறைகளின் கீழ் முன்னெடுக்கப்படும். கட்சித் தலைவர்களுடனான நீண்ட நேர சந்திப்பை அடுத்தே ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் முதற்கட்ட நடவடிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறும்.

அத்துடன் அரசியலமைப்பின் இரண்டாம் கட்ட சீர்திருத்தத்தின் போது தேர்தல் முறைமையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். மூன்றாவதாகவே செனட் குழு அமைக்கப்படும்.

இந்தச் சீர்திருத்தங்கள் அனைத்தும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் செய்து முடிக்கப்படும் என்றும் அமைச்சர் வீரவன்ச கூறினார்.

இதேவேளை இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தை வழிநடத்த முடியாது. அவர்கள் தமது அரசை ஒழுங்கான முறையில் நடத்தட்டும் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (ச-5)

**யாழ். மணமக்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்**



நவநாகரிக உலகின் மாற்றத்துக்கேற்ப அழகிய முறையில் மணப்பெண் அலங்காரம் செய்து தருகிறோம்.

நீங்கள் எந்த முறையில் அலங்காரம் செய்ய விரும்புகிறீர்களோ? ஆச்சரியப்படத்தக்க வகையில் சிறப்பாக அலங்கரித்து திருமணத்தை மனநிறைவோடு இரட்டிப்பு மகிழ்ச்சியாக்க உங்கள் இல்லங்களுக்கு வந்து மணப்பெண்ணை அலங்கரிக்கின்றோம்.

அழையுங்கள் : 0772205727, 0779788772

(1398)

**காணி தேவை**

மிருசுவில், எழுதுமட்டுவாழ், முகமாலை, பளை, கிளாலி ஆகிய பகுதிகளில் தென்னைகளுடன் அல்லது தென்னைச் செய்கைக்குரிய காணி தேவை.

மிதிவெடி அகற்றப்படாத, அல்லது விடுவிக்கப்படாத காணிகளும் ஏற்றுக் கொள்ளப்படும். காணிச் சொந்தக்காரர்கள் அல்லது உரித்துடையவர்கள் தொடர்பு கொள்வது விரும்பத்தக்கது.

தொடர்புக்கு: 077 9994603

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093 E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way**
**French Classes**

சர்வதேச மொழியான French மொழி வகுப்புகள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரேயொரு கலாசார, பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ALLIANCE FRANÇAISE ஒரு மையமாகும்.

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்

மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(1390)

**ஆசிரியர் தேவை**

சிறந்த முறையில் ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.

இன்று (14.05.2010) காலை 11 – 1 மணிக்கு நேரில் சமூகம் தரவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

European College of Higher Studies
315 1/2, Parameshwara Junction
Palaly Road, Jaffna.
T.P.: 071 7065527

(1395)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்14.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.